தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### நெல் பயிரில் மஞ்சள் கலந்த ஆரஞ்சு நிற இலையா...?



தமிழகத்தில் பயிரிடப்படும் உணவுப் பயிர்களில் நெல் பயிர் பிரதானமாக உள்ளது. திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் பிசானப் பருவத்தில் பரவலாக நெல் பயிரிடப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் பிசானப் பருவத்தில் 60 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் நெல் சாகுபடிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆரஞ்சு நிற தோன்றல்: இரு மாவட்டங்களிலும் பயிரிடப்பட்டுள்ள நெல் பயிர்களில் மஞ்சள் கலந்த ஆரஞ்சு நிற தோன்றல் காணப்படுகிறது. இந்த நிறமானது அடி இலைகளில் தொடங்கி மேற்புரம் வரையில் பரவி காணப்படும்.

அறிகுறிகள்: முதலில் அடி இலைகள் வெளிறிய மஞ்சள் நிறத்துடன் காணப்படும். பின்னர், இந்த அறிகுறிகள் மேல் இலைகள் வரைக்கும் படிப்படியாக பரவும். மஞ்சள் நிற அறிகுறிகளுக்கான காரணங்களை சரிசெய்யாமல் இருந்தால் பின்னர் ஆரஞ்சு நிறமாக மாறி இலையின் நுனி திசுக்கள் இறந்து காய்ந்து சருகுகளாக மாறும். இவ்வாறு நெல்லின் அடி இலையில் இருந்து நுனி இலை வரை காய்ந்து விடும். காயந்த இலைகளின் பயிர்களில் ஓரினச்சேர்க்கை நடைபெற முடியாது.

இதனால், மகசூல் குறையும். மேலும், பாதிக்கப்பட்ட நெல் பயிர்களில் பக்க சிம்புகள் உருவாகாமல் போகும். விளைச்சல் வெகுவாகப் பாதிக்கப்படும்.

காரணங்கள்: நெல்லில் மஞ்சள் கலந்த ஆரஞ்சு நிற இலை தோன்றுவதற்கு முக்கியமாக 2 காணரங்கள் உள்ளன. மண்ணில் சாம்பல் சத்து பற்றாக்குறை, மண்ணில் அகி இரும்பு சத்துகளின் கிடைக்கையால் இந்த பாதிப்பு ஏற்படுவதாக ஆராய்ச்சி மூலம் தெரியவந்துள்ளது. இந்த பாதிப்பானது வயல் முழுவதும் ஓரத்தில் இருந்து நடு வயல் வரையிலும் காணபட்டால் சாம்பல் சத்து பற்றாக்குறையால் உருவானது எனக் கண்டறியலாம். வயலின் நடுப்பகுதியில் மட்டும் பாதிப்பு இருந்தால் இரும்பு சத்து அதிகம் இருப்பதாகக் கண்டறியலாம். பயிரில் தேவைக்கு அதிகமாக உரங்களை இடுவதாலும், சமச்சீரற்ற ஊட்டச்சத்துகளை அளிப்பதாலும் இத்தகைய பாதிப்புகள் ஏற்படுகின்றன. மேலும், நிலங்களை காயவிடாமல் நீர்ப்பாய்ச்சுவதாலும் பாதிப்பு ஏற்படுகிறது. திருந்திய நெல் சாகுபடி முறையை விட சாதாரண முறையில் சாகுபடி செய்யப்பட்ட நெல் பயிரில் இத்தகைய பாதிப்பு அதிகமாகக் காணப்படுகிறது.

தடுக்கும் முறைகள்: இந்த பாதிப்பைக் கட்டுப்படுத்த சாம்பல் சத்தை சற்று கூடுதலாக இட வேண்டும். ஒரு ஹெக்டேர் நெல் பயிருக்கு பரிந்துரைக்கப்ட்ட 60 கிலோ சாம்பல் சத்துடன் கூடுதலாக 30 கிலோவையும் சேர்த்து பயிரின் வளர்ச்சி பருவத்துக்கு தகுந்தபடி பிரித்து இட வேண்டும். மண் பரிசோதனை செய்து அதற்கு தகுந்தபடியும் உரமிடலாம். மேலும், காய்ச்சல் பாய்ச்சல் முறையில் நீர் மேலாண்மையைக் கையாளுவதன் மூலமும் பாதிப்பைத் தவிர்க்கலாம். வளர்ச்சியடைந்த நெல்லில் பாதிப்பு வராமல் தடுக்க 2 சத டிஏபி, ஒரு சத யூரியா, ஒரு சத பொட்டாஷ் ஆகியவற்றை 15 நாள்களுக்கு ஒரு முறை கைத் தெளிப்பான் மூலம் பாதிக்கப்பட்ட பயிர்களில் முழுமையாக நனையும் வகையில் தெளிக்க வேண்டும். திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் இந்த தொழில்நுட்ப முறைகளை தவறாமல் பின்பற்றி மகசூல் இழப்பைக் கட்டுப்படுத்தலாம் என தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நெல் ஆராய்ச்சி நிலைய மண்ணியல் பேராசிரியர் சு. ஜோதிமணி தெரிவித்துள்ளார்.

## தைப் பட்டத்தில் லாபம் தரும் வெண்டை சாகுபடி!



சிறுவர் முதல் பெரியவர் வரையில் விரும்பும் காய்கறிகளில் ஒன்றான வெண்டை சாகுபடியில் தைப்பட்டத்தில் கூடுதல் லாபம் பெற தகுந்த ஆலோசனைகளைப் பின்பற்றுமாறு தோட்டக்கலைத் துறை அறிவுறுத்தியுள்ளது.

மருத்துவப் பண்புகள்: வெண்டைக்காயில் குறைவான கலோரிகளும், மிகுதியான ஏ, சி, தையமின், பி 6 விட்டமின், கால்சியம், துத்தநாகம் தாதுக்களும் உள்ளன. மேலும், பிபோபிளாவின், போலிக் அமிலம், நாரச்சத்துகள் கொண்டவை. வயது முதிர்வைக் குறைக்கும் பண்பை வெண்டை கொண்டிருப்பதால் அழகாககவும், இளமையாகவும் வைத்திருக்க உதவும்.

கால்சியமும், இரும்பும் அதிகம் உள்ளதால் கர்ப்பிணிப் பெண்களுக்கு பரிந்துரைக்கப்படுகிறது. வெண்டையில் உள்ள மூசிலேஜ், நார்ச்சத்து ஆகியவை ரத்த சர்க்கரையைச் சீராக்கும். மலச்சிக்கலைத் தடுக்கும். காரத்தன்மையுடையதால் அமிலத்தை சரிகட்டு குடல் புண்ணை சரியாக்கும். வெண்டை சாகுபடிக்கு தைப்பட்டம் மிகவும் ஏற்ற தருணமாகும்.

ரகங்கள்: கோ2, எம்.டி.யு1, அர்கா அனாமிகா, பார்பான கிராந்தி, பூசா சவானி மற்றும் வர்சா உப்கார்.

வீரிய ஒட்டு ரகங்கள்: சாஹிபா, யுஎஸ் 7902, கோ 3, யுஎஸ்9ஏ, ஆர்த்தி, வர்ஷா, எம்10, எம்12, விஜயா, விஷால் ஆகிய ரகங்களைத் தேர்வு செய்யலாம்.

மண் மற்றும் தட்பவெப்பம்: வெண்டையை எல்லா வகை மண்ணிலும் பயிரிடலாம். நல்ல உரச்சத்துள்ள மண் வகைகளில் நன்றாக வளரும். கார அமில நிலையை ஓரளவு தாங்கி வளரும்.

பருவம்: ஜூன்-ஆகஸ்ட், பிப்ரவரி- மார்ச் தகுந்த பருவங்கள்.

விதையளவு: வீரிய ஒட்டு ரகங்களாக இருந்தால் ஏக்கருக்கு 1.5 கிலோவும், இதர ரகங்கள் ஏக்கருக்கு 3 கிலோவும் தேவைப்படும்.

நிலம் தயாரித்தல்: வெண்டை சாகுபடிக்கு முன்னதாக நிலத்தை நான்கு முறை உழவு செய்ய வேண்டும். அடியுரமாக ஏக்கருக்கு 10 டன் தொழு உரம் இட வேண்டும்.

விதை நேர்த்தி: வெண்டை விதைகளை விதைப்பதர்கு 24 மணி நேரத்துக்கு முன் 2 கிராம் கார்பன்டசிம் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதைப்பதற்கு முன் விதைகளை 400 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் ஆறவைத்த அரிசிக் கஞ்சியுடன் கலந்து நிழலில் உலர வைக்க வேண்டும். 45 செ.மீ. இடைவெளியில் பார் அமைத்து 30 செ.மீ. இடைவெளியில் 2 விதைகள் வீதம் 2 செ.மீ. ஆழத்தில் ஊன்ற வேண்டும். பத்து நாள்களுக்குப் பிறகு நன்றாக உள்ள செடியை வைத்துக் கொண்டு மற்ற செடிகளைக் களைத்துவிட வேண்டும்.

நீர் நிர்வாகம்: விதைத்தப் பிறகு வாரத்துக்கு ஒரு முறை நீர்ப்பாய்ச்ச வேண்டும். சொட்டுநீர்ப் பாசன முறையில் நீர்ப்பாய்ச்சுதல் சாலச் சிறந்தது.

ஒருங்கிணைந்த உர நிர்வாகம்: அடியுரமாக ஏக்கருக்கு 8 கிலோ தழைச்சத்து தரக்கூடிய 18 கிலோ யூரியா, 20 கிலோ மணிச்சத்து தரக்கூடிய 15 கிலோ சூப்பர் பாஸ்பேட், 16 கிலோ சாம்பல் சத்து தரக்கூடிய 27 கிலோ மூரேட் ஆப் பொட்டாஷ் உரங்களை அடியுரமாக இட வேண்டும். விதைத்த 30 நாள்கள் கழித்து 8 கிலோ தழைச்சத்து தரக்கூடிய 18 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும். ஏக்கருக்கு 800 கிராம் அசோஸ்பைரில்லம், 800 கிராம் பாஸ்போ பாக்டீரியா உயிர் உரங்ளை 20 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து மண்ணில்

நேரடியாக இட்டு தழை, மணச்சத்து தேவையைக் குறைத்துக் கொள்ளலாம். இலை வழி ஊட்டம் அளிப்பதன் மூலம் மகசூலை அதிகரிக்கலாம்.

காய்த்துளைப்பான்: இத்தகைய பூச்சிகளை கட்டுப்படுத்த 5 இனக் கவர்ச்சிப் பொறிகளை வைத்து தாய் அந்து பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம். தாக்குதலுக்குள்ளான காய்களைச் சேகரித்து அழித்துவிட வேண்டும். முட்டைகளை அழிக்க ஏக்கருக்கு 40,000 டிரைகோ கிரம்மா முட்டை ஒட்டுண்ணிகளை விட வேண்டும். ஒரு லிட்டர் நீருக்கு 50 கிராம் வேப்பங்கொட்டை பொடி அல்லது 2 கிராம் கார்பரில் நனையும் தூள் அல்லது 2 மி.லி. மானோகுரோட்டோபாஸ் மருந்துகளில் ஒன்றைத் தெளிக்கலாம்.

சாம்பல் நிற வண்டு: கார்போ பியூரான் 3 ஜி குருணை மருந்தை ஏக்கருக்கு 5 கிலோ அளவில் இட வேண்டும்.

நூற்புழு: மண் பரிசோதனை மூலம் நூற்புழு தாக்குதலை கண்டறிந்தால் ஏக்கருக்கு 160 கிலோ வேப்பம் புண்ணாக்கை அடியுரமாக இடும்போது பிற உரங்களுடன் கலந்து இட வேண்டும். மேலும், ஏக்கருக்கு 400 கிராம் 3 சத கார்போ பியூரான், 10 சத போரேட் குருணை மருந்து இடலாம்.

மஞ்சள் நரம்புத் தேமல் நோய்: வெள்ளை ஈ எனும் பூச்சியால் இந்த நோய் பரவும். இந்த ஈயைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மி.லி. வேப்பெண்ணெய் அல்லது 2 மி.லி. மானோகுரோட்டோபாஸ் மருந்துகளில் ஒன்றைத் தெளிக்க வேண்டும். மஞ்சள் ஒட்டும் பொறிகளைப் பயன்படுத்தலாம்.

சாம்பல் நோய்: இந்த நோயின் அறிகுறிகள் தென்பட்டவுடனும், 15 நாள்கள் கழித்தும் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் நனையும் கந்தகம் கலந்து தெளிக்க வேண்டும். அறுவடை: விதைத்த 45ஆவது நாள் முதல் இரண்டு நாள்களுக்கு ஒரு முறை அறுவடை செய்யலாம். 90 முதல் 100 நாள்களில் ஏக்கருக்கு ஆறு டன் வரை மகசூல் எடுக்கலாம். மேலும், விவரங்களுக்கு அருகில் உள்ல தோட்டக்கலைத்துறை அலுவலகங்களை அணுகலாம் என உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

## 7 அரிசி ஆலைகளை நவீனமயமாக்க ரூ.32 கோடி நிதி: முதல்வர் உத்தரவு



7 இடங்களில் அரசு அரிசி ஆலைகளை நவீனமயமாக்க ரூ.32.60 கோடி நிதி ஒதுக்கி முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து, தமிழக அரசு புதன்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல் மேம்படுத்தப்பட்ட நவீன அரிசி ஆலைகள் மூலம் விரைவாக மற்றும் தரமான அரிசியாக மாற்றப்பட்டால் தான் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு தரமான அரிசி வழங்க இயலும். அந்த வகையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் இயக்கப்பட்டு வரும்

அரிசி ஆலைகளின் செயல் திறனை மேம்படுத்த வேண்டியது முக்கியம். எனவே, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அம்மன்பேட்டை, பட்டுக்கோட்டை, மதுரை மாவட்டத்தில் கடச்சனேந்தல், நாகப்பட்டினம் மாவட்டம் எருக்கூர், கடலூர் மாவட்டத்தில் நெய்வேலி, கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் செய்யாறு ஆகிய ஏழு இடங்களிலுள்ள அரிசி ஆலைகளை ரூ.32.60 கோடியில் நவீனமயமாக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார் என்று அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (ஜனவரி 24) நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் காலை 11 மணியளவில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வேளாண், தோட்டக்கலை, வருவாய்த்துறை, மின்சாரவாரியம், கூட்டுறவு உள்ளிட்ட அனைத்துத் துறை அலுவலர்களும் பங்கேற்கின்றனர்.

எனவே இம்மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் இக்கூட்டத்தில் பங்கேற்று பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### வேளாண் திட்டப் பணிகள்: மாவட்ட ஆட்சியர் ஆய்வு

திருவள்ளுர் மாவட்டத்தில் அரசு மானியத்தில் விவசாயிகளுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் வேளாண் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவராவ் புதன்கிழமை ஆய்வு செய்தார்.

திருவள்ளூர் மாவட்டத்துக்குட்பட்ட திருப்பாச்சூர், ஸ்ரீராமகுப்பம், தொம்பரம்பேடு, பனப்பாக்கம் ஆகிய கிராமங்களில் வேளாண் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த ஆய்வின் போது, பூண்டி ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட திருப்பாச்சூரில் கரும்பு பயிரில் 5 ஏக்கர் பரப்பளவில் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கப்பட்டுள்ளதை ஆட்சியர் மற்றும் அதிகாரிகள் பார்வையிட்டனர்.

பின்னர் ஸ்ரீராமகுப்பம் கிராமத்தில் ஒருங்கிணைந்த பண்ணையம் திட்டத்தின் கீழ் கறவை மாடுகள் வளர்ப்பு முறைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது ஆட்சியரிடம், கறவை மாடுகள் மூலமாக நாளொன்றுக்கு ரூ.350 வரை வருமானம் பெறுவதாகவும், அதற்கு தேவையான பசுந்தாள் தீவனப்பயிர், அந்த கிராமத்தில் ஒட்டுமொத்தமாக 25 ஏக்கரில் பயிர் செய்யப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கூறினர். பின்னர் திருந்திய நெல் சாகுபடி 100-150 ஏக்கரில் நடவு

செய்யப்பட்ட வயலையும், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட தொம்பரம்பேடு கிராமத்தில் நடவு இயந்திரம் மூலம் நடவு செய்யும் பணியையும் அவர்கள் பார்வையிட்டனர்.

இதனைத்தொடர்ந்து நடவு இயந்திரத்தை மாவட்ட ஆட்சியர் இயக்கி நடவுப் பணியினை மேற்கொண்டார்.

மேலும் விவசாயிகளுக்கு மானிய விலையில் விசைத் தெளிப்பான் மற்றும் கைத் தெளிப்பான் ஆகிய கருவிகளை ஆட்சியர் வழங்கினார். பின்னர் தாராட்சி கிராமத்தில் இயந்திரத்தின் மூலம் நடவு செய்ய உள்ள திருந்திய நெல் சாகுபடி மாதிரி நாற்றங்கால்களை அவர் பார்வையிட்டார்.

வேளாண்மை இணை இயக்குநர் என்.சுந்தர், துணை இயக்குநர் பாபு, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சுப்பிரமணியன் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

**நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (ஜன. 24) பிற்பகல் 3.30 மணிக்கு, விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.

மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி தலைமையில் நடைபெற உள்ள இக் கூட்டத்தில், விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு, தங்களது கோரிக்கைகளை தெரிவித்து தீர்வு காணலாம் என்று, மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

**வேளாண்மை கூட்டுறவுச் சங்கத்தில் ரூ.28 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் நடைபெற்ற ஏலத்தில், ரூ.28 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் போனது.

இங்கு வாரம்தோறும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் கொப்பரை ஏலம் நடைபெறுகிறது. புதன்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு பெருந்துறை மற்றும் சுற்றுப் பகுதி விவசாயிகள், 754 மூட்டைகளில் 37 ஆயிரம் கிலோ கொப்பரையை கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தர கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ.75.25-க்கும், அதிகபட்சமாக ரூ.79.50-க்கும் விற்பனையானது.

இரண்டாம் தர கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ.50-க்கும், அதிகபட்சமாக ரூ.74.55-க்கும் ஏலம் போனது. மொத்தமாக ரூ.28 லட்சத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது.

**கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தை இன்று முதல் இயங்கும்: ஆட்சியர்**

கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தை புதன்கிழமை முதல் இயங்கும் என்று, மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்தி:

கோமாரி நோய்த் தாக்குதல் தீவிரம் அடைந்ததையடுத்து ஈரோடு மாவட்டத்தில் நவ.12 முதல் கால்நடைச் சந்தைகளுக்கு தடை விதிக்கப்பட்டது. இந் நிலையில், கோமாரி நோய் கட்டுக்குள் வந்ததால் ஜன.10-ஆம் தேதிமுதல் கருங்கல்பாளையம் தவிர பிற சந்தைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இந் நிலையில், கர்நாடகம் மற்றும் ஆந்திர பகுதிகளில் இருந்து சாம்ராஜ் நகர் வழியாக ஈரோடு மாவட்டத்துக்குள் கொண்டு வரப்படும் கால்நடைகள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தையில் போதிய தற்காப்பு நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதால் புதன்கிழமை முதல் மாட்டுச் சந்தை இயங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இங்கு வரும் விவசாயிகள், தங்களது கால்நடைகளுக்கு போதிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

**போச்சம்பள்ளியில் பருத்தி ஏலம்**

போச்சம்பள்ளி கூட்டுறவு விற்பனையாளர்கள் சங்கத்தில் புதன்கிழமை பருத்தி ஏலம் நடைபெற்றது.

இங்கு 1996-ஆம் ஆண்டுக்குப் பிறகு நிகழாண்டில் பருத்தி ஏலம் நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்டது.

வேளாண்மை உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் கே.பி. தூயமணி முன்னிலை வகித்தார்.

கரடியூர், ஜம்புகுட்டப்பட்டி, புளியம்பட்டி, பாலேதேட்டம், மூங்கம்பட்டி, களர்பதி கிராமங்களிலிருந்து விவசாயிகள் பருத்தி மூட்டைகளை கொண்டு வந்திருந்தனர். போச்சம்பள்ளி, மத்தூர், ஊத்தங்கரை பகுதியிலிருந்து வந்த வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டனர். எம்.சி. 5 ரக பருத்தி குவிண்டால் ரூ.5100-க்கும், உயர் ரக பருத்தி ரூ.7100-க்கும் ஏலம் போயின.

சுமார் 300-க்கும் மேற்பட்ட பருத்தி மூட்டைகள் ஏலம் போயின.

**கால்நடை சந்தைகள் திறப்பு**

சேலம் மாவட்டத்தில் வியாழக்கிழமை (ஜனவரி 23) முதல் கால்நடை சந்தைகள் திறக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் க.மகரபூஷணம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சேலம் மாவட்டத்தில் இயங்கி வந்த ஆடு, மாட்டுச் சந்தைகள் கோமாரி நோய் பரவும் அபாயத்தைத் தடுக்கும் நோக்கில் தாற்காலிகமாக மூடப்பட்டன. இந்த நிலையில், கோமாரி நோயின் தாக்கம் தமிழகத்தில் குறைந்துள்ளதாலும், விலையில்லா ஆடுகளை கொள்முதல் செய்வதற்கு ஏதுவாகவும் ஜனவரி 23-ஆம் தேதி முதல் கால்நடை சந்தைகளைத் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஏற்கெனவே மாட்டுச் சந்தைகள் திறக்கப்பட்டிருந்த நிலையில், வியாழக்கிழமை முதல் ஆட்டு சந்தைகளும் திறக்கப்படுகின்றன. சந்தைகள் கூடும் இடங்களில் நோயுள்ள

கால்நடைகள் ஏதேனும் இருந்தால், உடனடியாக அவற்றைக் கண்டறிந்து தக்க மருத்துவ சிகிச்சைகள் அளித்திட கால்நடை மருத்துவக் குழுவினர் கண்காணிக்க உள்ளனர்.

மேலும், சந்தைகளுக்கு வரும் கால்நடைகளுக்கு தொற்றுநோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கால்நடைகளைக் கட்டிவைக்கும் இடங்களைச் சுற்றிலும் சலவை சோடா, பிளீச்சிங் பெப்டர் தூவி நோய்க் கிருமிகளை அழிக்க உள்ளாட்சி நிர்வாகம் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக ஆட்சியர் தெரிவித்தார்.

**நிலம் சமன்செய்யும்லேசர் கருவி செயல்விளக்க பயிற்சி**

ஜயங்கொண்டம் வேளாண் பொறியியல் துறை சார்பில், லேசர் நிலம் சமன்படுத்தும் கருவி செயல் விளக்கப் பயிற்சி தேவமங்கலம் கிராமத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பயிற்சியில் வேளாண் பொறியியல் துறை உதவிச் செயற்பொறியாளர் ப. மோகனகிருஷ்ணன் பேசியபோது, இந்தக் கருவியை பயன்படுத்தி நிலத்தை சமன்படுத்துவதன் மூலம் நீர்ப்பாய்ச்சுதல் மற்றும் உரமிடுதல் ஆகியவை ஒரே சீராக எல்லா இடங்களுக்கும் எல்லா பயிர்களுக்கும் கிடைக்கும். மேடு,பள்ளங்களில் நீர் தேங்கி வீணாகாமல் 30% நீரின் தேவை குறைகிறது. இந்த முறையில் சமன்படுத்தப்பட்ட நிலத்தில் பயிர்கள் சீரான வளர்ச்சியடைந்து 10 முதல் 15% அதிக உற்பத்தியை பெற முடியும் என்றார். நிகழ்ச்சியில் இளநிலை பொறியாளர்கள் என். கலைமணி, எம். நடராஜன், ஆர். ராஜாராம் மற்றும் தா.பழூர் உதவி விதை அலுவலர் அனந்தராமன் ஆகியோர் பங்கேற்றனர். தேவமங்கலம் டி. ராஜேந்திரன் வயலில் நடைபெற்ற பயிற்சியில் இந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

**அரியலூரில் நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை (ஜன. 24) நடைபெறுகிறது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெறுகிறது. இந்தக் கூட்டத்தில் நீர்ப்பாசனம், வேளாண் கடன் உதவிகள், இடுபொருட்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டுக்கான நலத் திட்டங்கள் குறித்த முறையீடுகள் விவாதிக்கப்படும். விவசாயிகள் அன்றைய தினம் தங்களது குறைகளைத் தெரிவிக்கலாம்.

**கரும்புக்கு அறிவித்த விலையை வழங்க மறுக்கும் ஆலைகள்**

கரும்புக்கு அரசு அறிவித்த விலையை உடனே வழங்கா விட்டால் போராட்டம் நடத்தப் போவதாக விவசாயிகள் அறிவித்துள்ளனர்.

ஆண்டுதோறும் மத்திய அரசு கரும்புக்கான ஆதரவு விலையை அறிவிக்கும். இந்த விலை ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் முதல் தேதியில் இருந்து நடைமுறைக்கு வரும். ஒவ்வொரு மாநில அரசும் தங்கள் மாநிலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப கூடுதல் விலையை அறிவிக்கும்.

கடந்த 2010-2011ஆம் ஆண்டு மத்திய அரசு டன்னுக்கு ரூ.1,391 அறிவித்தது. தமிழக அரசு ரூ.509 கூடுதலாக்கி ரூ.1,900 விலை அறிவித்தது. 2011-2012-ல் மத்திய அரசு ரூ.1,450-ம், தமிழக அரசு ரூ.2,000 என அறிவித்தது. 2012-2013-ல் மத்திய அரசு ரூ.1,700-ம் தமிழக அரசு ரூ.2,350 அறிவித்தது. இதில் போக்குவரத்து செலவு 100 ரூபாய் போக விவசாயிக்கு டன்னுக்கு ரூ.2,250 கிடைத்தது.

2013-2014 ஆண்டுக்கு கடந்த ஆண்டைவிட மத்திய அரசு ரூ.400 உயர்த்தி டன்னுக்கு ரூ.2,100 அறிவித்தது. தமிழக அரசு ரூ.2,650 அறிவித்துள்ளது.

இதில் போக்குவரத்துச் செலவு ரூ.100 போக கரும்புக்கு ரூ.2,550 கிடைக்கும். இவ்விலை கடந்த ஆண்டைவிட ரூ.300 அதிகமாகும். மத்திய அரசு கூட்டிய ரூ.400

விலையை, தமிழக அரசும் அறிவிக்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதுகுறித்து விவசாயிகள் சங்க நிர்வாகி பெண்ணாடம் சோமசுந்தரம், கார்மாங்குடி வெங்கடேசன் ஆகியோர் கூறியது:

மின் தட்டுப்பாடு, உரவிலை உயர்வு, ஆள்கள் பற்றாக்குறை போன்ற பல்வேறு பிரச்னைகளுக்கிடையே கரும்பு பயிரிட்டு வருகிறோம். கடந்த ஆண்டை விட ரூ.300 மட்டுமே விலையை உயர்த்தியது ஏமாற்றத்தை அளிக்கிறது.

கடந்த ஆண்டைவிட சர்க்கரை உற்பத்தி பல லட்சம் டன்கள் குறைந்துள்ளது. கட்டுப்படியான விலை கிடைக்காததால் வரும் காலங்களில் கரும்பு பயிரே இல்லாத நிலை ஏற்படும். டன்னுக்கு ரூ.3,500 விலை நிர்ணயித்தால் மட்டுமே கரும்பு விவசாயிகளைக் காப்பாற்ற முடியும்.

தமிழக அரசு அறிவித்த விலை கடந்த அக்டோபர் 1ஆம் தேதி முதல் பொருந்தும். ஆனால், இதுவரை தமிழக அரசு அறிவித்த விலையை ஆலைகள் வழங்கவில்லை.

ஒரு சில ஆலைகள் கடந்த ஆண்டு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை கூட இன்னும் வழங்கவில்லை. இதனால், கடந்த ஆண்டு நிலுவைத் தொகை, இப்போது அரசு அறிவித்த விலையை ஆலைகள் வழங்காவிட்டால் போராட்டம் நடத்துவோம் என்றனர்.

இதுகுறித்து சர்க்கரை ஆலை நிர்வாகத்தினரிடம் கேட்டபோது, உற்பத்திச் செலவைவிட சர்க்கரை விலை மிகக் குறைவாக உள்ளது. ஆலையை நஷ்டத்தில் நடத்த வேண்டிய நிலையில் உள்ளோம். கடந்த ஆண்டைவிட கூடுதலாக அறிவித்த விலையை விவசாயிகளுக்கு தமிழக அரசே வழங்க வேண்டும் என்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

உற்பத்தி துவங்கியதால் காய்கறி விலை...வீழ்ச்சி! சாலையோர கடைகளுக்கு திடீர் "மவுசு'



கடலூர்:கடலூர் மாவட்டத்தில் உள்ளூர் காய்கறிகள் உற்பத்தி துவங்கியுள்ளதன் விளைவாக "கிடுகிடு' வென உயர்ந்து வந்த காய்கறி விலை தற்போது வீழ்ச்சி அடைந்துள்ளது.

தமிழகத்தில் பருவ மழைக்காலமான அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் உள்ளூர் காய்கறிகள் விளைவிக்க முடியாது. தொடர் மழைக் காரணமாக வேர் அழுகி செடிகள் பட்டுவிடும். எனவே இக்காலங்களில் மழை மறைவு மாவட்டங்களான ஈரோடு, சேலம், மலை பகுதிகளான கோவை, ஊட்டி போன்ற பகுதிகளில் இருந்து காய்கறிகள் வரவழைத்து விற்பனை செய்வது வழக்கம். இதனால் காய்கறியின் விலையோடு லாரி வாடகை சேர்த்தால் காய்கறியின் விலை பல மடங்கு உயர்ந்து நிற்கும். இதனால் நாம் அன்றாடம் உபயோகிக்கும் தக்காளி, கத்தரிக்காய், வெங்காயம், புடலை, அவரைக்காய் போன்றவை பல மடங்கு விலை உயர்ந்து வந்தது. இந்த ஆண்டு மாவட்டத்தில் பருவ மழை 65 சதவீதம் அளவே பெய்தது.

இதனால் விவசாயிகள் முன்கூட்டியே புஞ்சை நிலங்களில் காய்கறி பயிர்கள் செய்யத் துவங்கினர். தற்போது உள்ளூர் காய்கறிகள் உற்பத்தியாகி

மார்க்கெட்டிற்கு வரத் துவங்கியுள்ளன. பண்ருட்டியில் உற்பத்தியாகும் கத்தரிக்காய், அவரைக்காய், புடலை, வெண்டைக்காய், பச்சைமிளகாய், முட்டைகோஸ் போன்ற பொருட்கள் மார்க்கெட்டிற்கு வரத்துவங்கியுள்ளன. இதனால் காய்கறி விலை

வழக்கத்தைவிட வீழ்ச்சி அடைந்துள்ளது. நேற்று மஞ்சக்குப்பம் அண்ணா மார்க்கெட்டில் மொத்த வியாபாரிகள் கடையில் கத்தரிக்காய் ஒரு கிலோ 5ரூபாய், அவரைக்காய் 8, தக்காளி 5 மற்றும் மலைக்காய்கறிகளான உருளை 24, கேரட் 16 ரூபாயிற்கு விற்பனை செய்யப்பட்டது.

உள்ளூர் காய்கறிகள் விலை கடும் வீழ்ச்சி அடைந்ததால் மலைக் காய்கறிகள் விற்பனை மந்தமாக உள்ளது.

விலை வீழ்ச்சிக் காரணமாக சேலம், ஈரோட்டில் இருந்து லாரிகள் மூலம் வரவழைக்கப்பட்ட காய்கறிகள் சரி வர விற்பனையில்லாமல் மந்த நிலையில் இருந்தன. இதனால் கமிஷன் கடையில் சரிவர வியாபாரம் நடைபெறவில்லை. அத்துடன் சில்லரை காய்கறி கடையில் கத்தரி, தக்காளி, அவரை போன்றவை மிகக்குறைவான விலையில் விற்பனை செய்வதால் எடை போடாமலேயே தோராய அளவில்(அதிகபட்சமாக) கொடுக்கும் நிலை உள்ளது.

இது ஒரு புறமிருக்க மார்க்கெட்டில் சென்று காய்கறி

வாங்கும் பழக்கம் வெகுவாக குறைந்து வருகிறது. காரணம், விசாலமான சாலையோரத்தில் ஏராளமான காய்கறி கடைகள் உருவாகியுள்ளன. இது தவிர மாலை நேரத்தில் சாலையோரம் திடீர் கடைகள் போடப்படுகின்றன. காய்கறி மார்க்கெட்டிற்கு சென்றால் வாகனத்தை ஒரு இடத்தில் நிறுத்திவிட்டு கையில் காய்கறிகளை சுமந்துகொண்டு வர வேண்டும்.

ஆனால் நடை பாதை கடைகளில் அப்படியல்ல. வாகனங்களை கடை முன்பே நிறுத்திவிட்டு எளிதாக வாங்கிக்கொண்டு செல்வதையே மக்கள் விரும்புகின்றனர். இதனால் மார்க்கெட்டில் காய்கறி விற்பனை மிகவும் குறைந்து வருவதாக வியாபாரிகள் வேதனை தெரிவித்தனர்.

## பலத்த காற்றால் அன்னங்கோவில் மீன் இறங்கு தளம் வெறிச்சோடியது! மீன் பிடிக்க செல்லாததால் கேரளா மீன் விற்பனை அமோகம்

பரங்கிப்பேட்டை:பரங்கிப்பேட்டை கடலில் பலத்த காற்று வீசுவதால் மீனவர்கள் கடந்த நான்கு நாட்களாக மீன் பிடிக்க செல்லாததால் அன்னங்கோவில் மீன் இறங்குதளம் வெறிச்சோடி காணப்படுகிறது. மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லாததால் கேரளாவில் இருந்து மீன்கள் இங்குக் கொண்டு வரப்பட்டு அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

பரங்கிப்பேட்டை கடற்கரையோர கிராமங்களான புதுக்குப்பம், புதுப்பேட்டை, சாமியார்பேட்டை, பரங்கிப்பேட்டை, சின்னூர், வேளங்கிராயன்பேட்டை உட்பட 20க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் இன்ஜின் படகுகள், விசைப் படகுகளில் கடலுக்குச் சென்று வஞ்சரம், சூரை, கவலை, கெளுத்தி, பாரை, அகிலா, மத்தி உள்ளிட்ட மீன் வகைகளை அதிகளவில் பிடித்து அன்னங்கோவில் மீன் இறங்குதளத்திற்கு விற்பனை கொண்டு வருகின்றனர்.

மீன் வியாபாரிகள் உயர்ரக மீன் வகைகளை ஏலம் எடுத்து, சுகாதாரமான முறையில் பேக்கிங் செய்து கனரக வாகனங்கள் மூலம் கேரளா, ஆந்திரா உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றனர். தினமும் இங்கிருந்து 20க்கும் மேற்பட்ட கனரக வாகனங்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்படுவதால் மீனவர்களுக்கு அதிக வருவாய் கிடைத்து வந்தது.

தற்போது கடந்த இரண்டு மாதங்களாக கடலில் ஏற்பட்டுள்ள மாற்றத்தால் குறைந்த அளவிலான மீன்களே கிடைத்து வருகிறது. இதனால் மீன் விலை அதிகரித்ததுள்ளது.

இந்நிலையில் கடந்த நான்கு நாட்களாக பரங்கிப்பேட்டை கடல் பகுதியில் காற்று பலமாக வீசுவதால் மீனவர்கள் யாரும் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லவில்லை. இதனால் மீனவர்கள் தங்கள் படகுகளைக் கடற்கரையோரம் பாதுகாப்பாக நிறுத்தி

வைத்துள்ளனர்.

மீனவர்கள் கடலுக்குச் செல்லாததால் மீன் வியாபாரிகள் விற்பனைக்காக கேரளாவில் இருந்து கவலை மீன்களை இங்குக் கொண்டு அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர். சாதாரணமாக கவலை மீன் 30 கிலோ கொண்ட பாக்ஸ் 500 ரூபாய் விற்பனை செய்யப்பட்டது. நேற்று 30 கிலோ பாக்ஸ் 1000 ரூபாய் முதல் 1200 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.

எப்போதும் பொதுமக்கள் நடமாட்டம் அதிகமாக காணப்படும் அன்னங்கோவில் பகுதி தற்போது வெறிச்சோடி காணப்படுகிறது.

## புதுச்சேரி பகுதியில் கரும்பு உற்பத்தி...அதிகரிப்பு! சோதனையிலும் விவசாயிகள் சாதனை



கரும்பு உற்பத்தி, புதுச்சேரியில் அதிகரித்துள்ளது.

புதுச்சேரியில், 4 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏற்கனவே, 2800 ஏக்கரில், கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல், நடப்பு 2012-13ல், 1600 ஏக்கரில், புதிதாக கரும்பு நடவு செய்யப்பட்டுள்ளது. ஆண்டு முழுவதும், கரும்பு சாகுபடி செய்யப்பட்டாலும், நவம்பர் மாதத்தின் கடைசியில் ஆரம்பித்து, ஜூன் மாதம் வரை, கரும்பு அறுவடை செய்யப்படுவது வழக்கம். புதுச்சேரியில் சாகுபடியாகும் கரும்பு, பெரும்பாலும், லிங்காரெட்டிப்பாளையத்தில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கே அறவைக்கு அனுப்பப்படுகிறது.

பல்வேறு நெருக்கடிகளை கரும்பு விவசாயிகள் சந்தித்தாலும், கரும்பு உற்பத்தி, ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருவது பாராட்டுக்குரியது.
தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்களில், கரும்புக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்ட பிறகே, அறுவடை துவங்கும். ஆனால், புதுச்சேரியில் கரும்புக்கு விலை நிர்ணயம் செய்வதில், ஒவ்வொரு ஆண்டும் இழுபறி ஏற்படுகிறது.
தமிழகத்தில், நடப்பு 2013-14ம் ஆண்டுக்கு, டன் ஒன்றுக்கு, 2650 ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், புதுச்சேரியில் கரும்பு அறுவடை துவங்கி, தீவிரமாக நடந்துவரும் நிலையிலும், விலை நிர்ணயம் குறித்த அறிவிப்பு இதுவரை அரசால் வெளியிடப்படவில்லை. மேலும், கரும்பை வெட்டி அனுப்பினாலும், பணம் பட்டுவாடா செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. கடந்த காலங்களில், 15 நாட்களுக்குள் பணம் பட்டுவாடா செய்யப்படுவது வழக்கம். ஆனால், தற்போது, பணம் பட்டுவாடா செய்வதற்கு, 2, 3 மாதங்களாகி விடுகிறது.
கடனுக்காக, விவசாயிகளிடம் பிடித்தம் செய்யப்பட்ட பணத்தை, வங்கிகளுக்கு அனுப்புவதில் ஏற்படும் தாமதத்தால், விவசாயிகள், வட்டி செலுத்த வேண்டிய நெருக்கடி ஏற்படுகிறது. வளர்ந்து நிற்கும் கரும்பை வெட்டுவதற்கு, "கட்டிங் ஆர்டர்' உடனுக்குடன் வழங்கப்படாததாலும், விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. நிர்வாகச் சீர்கேடுகளால், கூட்டுறவு சர்க்கரை ஆலை நஷ்டத்தில் தள்ளாடி கொண்டுள்ளது, கரும்பு விவசாயத்துக்கு, பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது. கூட்டுறவு சர்க்கரை ஆலையில், நவம்பர் 5ம் தேதி துவங்க வேண்டிய அறவை, தாமதமாக, டிசம்பர் 30ம் தேதி தான் துவங்கியது.
இவ்வளவு நெருக்கடிகளுக்கு மத்தியிலும், விவசாயிகளின் அயராத உழைப்பால், கரும்பு உற்பத்தி அதிகரித்து வருகிறது.
கடந்த 2007-08ல், 2 லட்சத்து 28 ஆயிரத்து 416 மெட்ரிக் டன், கரும்பு உற்பத்தி செய்யப்பட்டது. இது, ஆண்டுதோறும் அதிகரித்து, கடந்த 2012-13ல், 3 லட்சத்து 4 ஆயிரத்து 632 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது.
புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், புதுச்சேரி பகுதியில் மட்டுமே, கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

இனிக்கும் கரும்பு உற்பத்தி ஆண்டு உற்பத்தி
(மெட்ரிக் டன்)
2007-08 2,28,416
2008-09 1,62,323
2009-10 2,47,254
2010-11 2,77,683
2011-12 2,87,785
2012-13 3,04,632

**மானிய விலையில் சொட்டு நீர் பாசன கருவி**

காஞ்சிபுரம்:கோடை பருவத்தில் நெல், சிறு தானியங்களை பயிரிடுவதை ஊக்குவிக்கும் வகையில், மானிய விலையில், நடமாடும் சொட்டு நீர் தெளிப்பு பாசனக் கருவி மற்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் உரங்களை வழங்க, அரசு திட்டமிட்டு உள்ளது. இதுகுறித்து, வேளாண் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: காஞ்சிபுரம் மாவட்டத்தில், 1,10,872 ஹெக்டேரில் சாகுபடி நிலங்கள் உள்ளன. எனினும், இதில், 77,202 ஹெக்டேர் பரப்பளவில் மட்டுமே, விவசாயம் நடந்து வருகிறது. இதில், கோடை பருவத்தில், 30 ஆயிரம் ஹெக்டேரில் நெல் மற்றும் 6,800 ஹெக்டேரில், சிறு தானியங்களை உற்பத்தி செய்ய, அரசு வேளாண் துறைக்கு இலக்கு நிர்ணயம் செய்துள்ளது.இதற்காக, சிறு தானிய உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு, 15 ஆயிரம் ரூபாய் மானியத்தில், நடமாடும் சொட்டு நீர் தெளிப்பு பாசனக் கருவிகள் மற்றும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் டி.ஏ.பி., உரங்களை வழங்க, அரசு திட்டமிட்டு உள்ளது.இந்த திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள், அந்தந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் உள்ள, உதவி இயக்குனர்களை நாடலாம்.
இவ்வாறு, அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## மண்புழு உரம் பயன்படுத்த ஆட்சியர் அறிவுரை

திருவள்ளூர்:தோட்ட பயிர்களுக்கு மண்புழு உரங்களை, பயன்படுத்துமாறு, வேளாண் அதிகாரிகளுக்கு, ஆட்சியர் அறிவுரை வழங்கினார்.
திருவள்ளுர் மாவட்டத்தில் நடைபெறும் வேளாண் திட்டப் பணிகளை, மாவட்ட ஆட்சியர் வீர ராகவ ராவ், பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.
பூண்டி ஒன்றியம், திருப்பாச்சூரில், கரும்பு பயிரில், 5 ஏக்கர் பரப்பளவில் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டார். பின், ஸ்ரீராமகுப்பம் கிராமத்தில் ஒருங்கிணைந்த பண்ணையம் திட்டத்தின் கீழ், கறவை மாடுகள் வளர்ப்பு முறைகள் குறித்து, ஆட்சியர் ஆய்வு செய்தார்.
எல்லாபுரம் ஒன்றியம், தொம்பரம்பேடு கிராமத்தில் நடவு இயந்திரம் மூலம் நடவு செய்வதை பார்வையிட்டதுடன், நடவு இயந்திரத்தை இயக்கினார். மகளிர் குழு மூலம் தயாரிக்கப்பட்டுள்ள மண்புழு உரம் குறித்து ஆய்வு செய்து, மண்புழு உரம் விற்பனை செய்ய, தோட்டக்கலை மற்றும் இதர பயிர்களுக்கு பயன்படுத்த அறிவுரை வழங்கினார்.

## தேங்காய் நார் விலையேற்றத்தால் குறைந்தது கயிறு உற்பத்தி

நங்கவள்ளி: சீனாவுக்கு, தேங்காய் நார் அதிகளவு ஏற்றுமதி செய்யப்பட்டு விடுவதால், நார் விலையேற்றம் காரணமாக, உள்ளூர் கயிறு உற்பத்தி கடும் பாதிப்படைந்துள்ளது.
சேலம் மேற்கு பகுதியில், ஜங்சன் தொடங்கி தாரமங்கலம் வரை, முத்துநாய்க்கன்பட்டி, பாகல்பட்டி, பாப்பம்பாடி, ஓலப்பட்டி, கருக்கல்வாடி, கோட்டைமேடு, எல்லானூர், செம்மேடு ஆகிய பகுதிகளில், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர், கயிறு திரிக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். கயிறு திரிப்பதற்கு தேவையான தேங்காய் நார் அடிக்கும் தொழிற்சாலைகள், 40க்கு மேல் உள்ளது.
கயிறு திரிக்கும் தொழிலாளர்கள், பொள்ளாச்சி மற்றும் பட்டுக்கோட்டை பகுதிகளிலிருந்து, தேங்காய் நார் வாங்கி வந்து, கயிறு திரிக்கின்றனர். நார் மண்டி உரிமையாளர்கள், தேங்காய் மட்டையை பொள்ளாச்சியிலிருந்து வாங்கி வந்து,

நார் அடித்து விற்பனை செய்து வருகின்றனர்,

கடந்த ஆண்டு, 36 கிலோ நார் கட்டு, ஒன்று, 600 ரூபாய்க்கு கிடைத்தது.

நடப்பாண்டில், அதே நார் கட்டு, 900 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இவ்வளவு விலை கொடுத்து, நார் வாங்கி கயிறு திரித்தால், கட்டு ஒன்றுக்கு, தொழிலாளர்களுக்கு, 70 ரூபாய் கூட லாபம் கிடைப்பதில்லை. போதிய வருமானம் கிடைக்காததால், ஏராளமான தொழிலாளர்கள் மாற்று வேலைக்கு சென்று விட்டனர். கயிறு திரிக்கும் தொழில் நசிவடைந்து வருவது குறித்து, நார் மண்டி உரிமையாளர் எல்லானூர் தங்கவேல் கூறியதாவது:

கடந்த ஆண்டு, தேங்காய் மட்டை லோடு, 9,000 ரூபாய்க்கு கிடைத்தது. நடப்பு ஆண்டில், 20 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகி வருகிறது.

பொள்ளாச்சியிலிருந்து, சீனாவுக்கு தேங்காய் நார் ஏற்றுமதி செய்வதால் தான்,தேங்காய் மட்டை மற்றும் நார்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, உள்ளூரில் விலை அதிகரித்து விட்டது.

கடந்த ஆண்டு, ஜூன் முதல் நவம்பர் வரை,பொள்ளாச்சியிலிருந்து, சீனாவுக்கு நார் ஏற்றுமதி செய்யப்பட்டது. கடந்த, ஒரு மாதமாக, ஏற்றுமதி செய்வது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மீண்டும், பிப்ரவரி மாதம் நார் ஏற்றுமதி தொடங்கும் என்பதால், பொள்ளாச்சி பகுதியில், பலர் தேங்காய் நாரை பதுக்கி வைத்துள்ளனர். இதுவே நார் விலையேற்றத்திற்கு காரணம். இதனால், உள்ளூரில், கயிறு உற்பத்தியும் பாதியாக குறைந்து விட்டது.இவ்வாறு அவர் கூறினார்.

## கால்நடைகளுக்கு தீவனம் வெட்டும் இயந்திரம்

சேலம்: சேலம் மாவட்டத்தில், பசும்புல் தீவனத்தை வெட்டும் இயந்திரம், மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கும் பணி துவங்கியது.

சேலம் மாவட்டத்தில் கரும்பு, வாழை, மஞ்சள் போன்ற பயிர்களும், சாமந்தி, சம்பங்கி, அரளி, மல்லிகை போன்ற பூக்கள் பயிரிடும் விவசாயிகளும் அதிகம் உள்ளனர். தவிர, பெரும்பாலான விவசாயிகள் எருமை, பசு மாடுகள், ஆடுகளை வளர்க்கின்றனர். பருவமழை தவறியதால், கோடைக்காலத்தில் கால்நடைகளுக்கு தீவனம் கிடைக்காமல் கடந்தாண்டு, சேலம் மாவட்ட விவசாயிகள் அவதிப்பட்டனர். இந்தாண்டும் அதே நிலை தான் வரும் என,

எதிர்பார்க்கப்படுகிறது. தீவனப் பற்றாக்குறையை போக்குவதற்கு விவசாயத்துறையும், கால்நடைத்துறை நடவடிக்கையில் இறங்கியுள்ளது. சேலம் மண்டல கால்நடைத்துறை இணை இயக்குனர் டாக்டர் சிவபிரகாசம் கூறியதாவது:

சேலம் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், கால்நடைகளுக்கு தீவனமாக பசும்புல் கொடுக்கின்றனர். தீவன புற்கள், ஏழு அடி உயரம் வரை வளரக்கூடியவை. இவைகளை மாடுகளுக்கு தீவனமாக தந்தால், புற்களை அப்படியே சாப்பிட சிரமப்படுகின்றன. இவற்றை தவிர்ப்பதற்காக, கோவையில் தயாரிக்கப்பட்ட பசும்புல் தீவனம் வெட்டும் இயந்திரம் சேலம் மாவட்டத்துக்கு வந்துள்ளது. சேலம் மாவட்டத்துக்கு இந்தாண்டுக்குள், 450 பசும்புல் தீவனம் வெட்டும் இயந்திரங்கள் வழங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இதில், 100 இயந்திரங்கள் வந்துள்ளன. இந்த இயந்திரங்களை ஒன்றிணைக்கும் பணி நடந்து வருகிறது.

பசும்புல் தீவனம் வெட்டும் இயந்திரத்தில், ஐந்தடி, ஏழடி உயர தீவனப் பயிர்களை போட்டு விட வேண்டும். அந்த இயந்திரம் தீவனப் பயிர்களை துண்டு துண்டாக வெட்டி, மாடுகள் சாப்பிடும் வகையில் தரும். அதன் பிறகு, மாடுகள் எந்தவித சிரமுமின்றி, அவைகளை சாப்பிடும்; கடினமாக அசைப்போட்டு சாப்பிடுவது தவிர்க்கப்படும்.

பசுந்தீவன சோளம், கோ-3, கோ-4 கலப்பு தீவன புல்களின் அறுவடை பணிக்கு, அரசின் மானிய உதவி கொடுத்து வருகிறோம். கடந்தாண்டு, 100 விவசாயிகளுக்கு, பசும்புல் தீவனப் பயிர்களை அறுவடை செய்வதற்குரிய இயந்திரங்கள் வழங்கப்பட்டது. இந்த இயந்திரத்தின் விலை, 17, ஆயிரத்து 400 ரூபாய். இதில், 75 சதவீதம் மானியமாக இருப்பதால், விவசாயிகள், 4,350 ரூபாய் செலுத்தி, இயந்திரத்தை வாங்கிச் செல்லலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## காய்கறி விலை கடும் வீழச்சி: வாழப்பாடி விவசாயிகள் கவலை

வாழப்பாடி: வாழப்பாடி பகுதியில், பெரும் சிரமத்திற்கு இடையே உற்பத்தி செய்யப்படும் காய்கறி விலை, கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளதால், விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர்.

சேலம் மாவட்டத்தில் "காய்கறி' உற்பத்தியில் வாழப்பாடி மற்றும் சுற்றுப்புற கிராமங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. வாழப்பாடி பகுதி கிராமங்களில், ஆண்டு முழுவதும், 1,000 ஹெக்டேர் பரப்பளவில், குறுகிய கால பணப்பயிரான தக்காளி, வெண்டை, முள்ளங்கி, கத்திரி, அவரை, புடலை, பீர்க்கன், கொத்தவரை, பாகற்காய், பூசனி, மிளகாய், சுரைக்காய் உள்ளிட்ட காய்கறிகளை விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர்.

விளைவிக்கும் காய்கறிகளை, வாழப்பாடியிலுள்ள தினசரி காய்கறி கமிஷன் மண்டிகளுக்கு கொண்டு வந்து, ஏல முறையில் விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். காய்கறிகளை கொள்முதல் செய்ய, உள்ளூர் வியாபாரிகள் மட்டுமின்றி, சென்னை, செங்கற்பட்டு, திண்டிவனம், விழுப்புரம், பண்ருட்டி, கள்ளக்குறிச்சி, சின்னசேலம், கடலூர், வேப்பூர்,நெய்வேலி, பெரம்பலூர், அரியலூர், விருதாச்சலம் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகளும் வந்து செல்கின்றனர்.

வாழப்பாடி பகுதியில் கடந்த, இரு ஆண்டுகளாகவே பருவமழை பொய்த்து கடும் வறட்சி நிலவி வருகிறது. அதனால், காய்கறி உற்பத்தி பாதியாக குறைந்துள்ளது. ஆனால், மற்ற பகுதியில் காய்கறி விளைச்சல் அதிகரித்துள்ளதால், வாழப்பாடிக்கு காய்கறி கொள்முதல் செய்ய வரும் வியாபாரிகளின் எண்ணிக்கை குறைந்து, விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

எட்டு கிலோ எடை கொண்ட, ஒரு கூடை தக்காளி அதிகபட்சமாக, 50 ரூபாய், ஒரு கூடை பாகற்காய், 60 ரூபாய், அவரைக்காய், 40 ரூபாய், கத்திரிக்காய், 50 ரூபாய், கொத்தவரை, 30 ரூபாய்க்கும் மட்டுமே விலை போகிறது. 20 சுரைக்காய்கள், 20 ரூபாய் வரை மட்டுமே விற்கிறது.

கடும் வறட்சியிலும், பெரும் சிரமத்திற்கிடையே காய்கறி உற்பத்தி செய்து விற்பனைக்கு கொண்டு வரும் விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர். காய்கறி

செடிகளை பயிரிட்டு, தொடர்ந்து பராமரித்து, பறித்து விற்பனைக்கு கொண்டு வரும் செலவுக்கே, விலை கட்டுப்பிடியாகவில்லையென, விவசாயிகள் புலம்புகின்றனர்.

அது குறித்து வாழப்பாடி வட்டார காய்கறி விவசாயிகள் சங்க தலைவர் மாரியம்மன்புதூர் கவுன்சிலர் முருகன் தெரிவித்ததாவது:

வாழப்பாடி பகுதியில், 2,000 விவசாயிகள், காய்கறி பயிரிட்டு வருகின்றனர். இரு ஆண்டுகளாக பருவ மழை இல்லாமல், பாசனத்திற்கு வழியில்லாத நிலையிலும் பெரும் சிரமத்திற்கு இடையே விவசாயிகள் காய்கறிகளை உற்பத்தி செய்து வருகின்றனர்.

தற்போது, காய்கறி விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளதால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது, என்றார்.

## கால்நடை சந்தைகள் இன்று திறப்பு: சேலம் கலெக்டர் அறிவிப்பு

சேலம்: "சேலம் மாவட்டத்தில் உள்ள கால்நடை சந்தைகள், இன்று முதல் திறக்கப்படும்' என்று கலெக்டர் அறிவித்துள்ளார்.சேலம் கலெக்டர் மகரபூஷணம் வெளியிட்ட அறிக்கை:

சேலம் மாவட்டத்தில், கோமாரி நோய் தாக்குதல் காரணமாக, கால்நடை சந்தைகள் தற்காலிகமாக மூடப்பட்டன. ஆய்வில், சேலம் மாவட்டத்தில், கோமாரி நோய் தாக்கம் இல்லை, என்று கண்டறியப்பட்டது.இதனால், சேலத்தில், தற்காலிகமாக மூடப்பட்ட கால்நடை சந்தைகள், இன்று (23 ம் தேதி) முதல் திறக்கப்படுகிறது. சந்தைகள் கூடும் இடங்களில், நோய் கிருமிகளை அழிக்குமாறு உள்ளாட்சி நிர்வாகங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

## மாட்டு சந்தை மீண்டும் துவக்கம்: கால்நடை டாக்டர்கள் ஆய்வு

ஈரோடு: ஈரோடு, கருங்கல்பாளையம் மாட்டுச்சந்தை, நேற்று முதல் மீண்டும் செயல்பட துவங்கியது. இதனால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஈரோடு, கருங்கல்பாளையம் மாட்டுச்சந்தை, வாரந்தோறும் புதன் கிழமை அடிமாட்டு சந்தையாகவும், வியாழக்கிழமை கறவை மாட்டு சந்தையாக செயல்படும். ஈரோடு, திருப்பூர், சேலம், நாமக்கல் மாவட்ட கால்நடை வளர்ப்போர்

வாரந்தோறும் கால்நடைகளை விற்க, இங்கு கொண்டு வருகின்றனர். அதுபோல் தமிழகம் மட்டுமின்றி கேரளா, ஆந்திரா, கர்நாடகா, கோவா மாநில வியாபாரிகள், இடைத்தரகர்கள் இங்கு வந்து மாடுகளை வாங்கி செல்கின்றனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன், தமிழகம் முழுவதும் கால்நடைகளுக்கு, குறிப்பாக மாடுகளுக்கு கோமாரி நோய் அதிகளவில் ஏற்பட்டது. நோய் பாதித்த மாடுகள் இறந்தன. இதனால், நவ., 10ம் தேதி முதல், கால்நடை சந்தைகள், மாநிலம் முழுவதும் தடை செய்யப்பட்டது.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள, 13 கால்நடை சந்தைகள் மூடப்பட்டன. தற்போது, கோமாரி நோய் தாக்கம் குறைந்ததால், மீண்டும் சந்தைகளை திறக்க அரசு முடிவு செய்தது.

மாநிலம் முழுவதும் பொங்கலுக்கு முன்பே, கால்நடை சந்தைகளை திறக்கக்கப்பட்டது.

ஆனால், ஈரோடு மாவட்டம், கருங்கல்பாளையம் சந்தைக்கு மட்டும் அனுமதி மறுக்கப்பட்டது. அதிகளவிலான மாடுகள் கூடுவதால், ஆய்வுக்கு பின் சந்தை நடத்த அனுமதிக்கப்படும், என கலெக்டர் தெரிவித்தார்.

இதனால், நேற்று காலை கலெக்டர் சண்முகம் தலைமையில், வருவாய் துறையினர், கால்நடை துறையினர் கருங்கல்பாளையத்தில், மாட்டு சந்தை நடைபெறும் இடத்துக்கு, நேரடியாக சென்று ஆய்வு நடத்தினர். சந்தைக்கு, 300 மாடுகள் கொண்டு வரப்பட்டு இருந்தது. மேலும், உள்ளூர் வியாபாரிகளுக்காக, 100க்கும் மேற்பட்ட அடி மாடுகளும் விற்பனைக்கு வந்திருந்தன.

நான்கு டாக்டர்கள் சந்தையில் மாடுகளுக்கு பரிசோதனை மேற்கொண்டனர். மாடுகளுக்கு என தண்ணீர் தொட்டி அமைக்க வேண்டும். சுகாதாரமாக வைத்திருக்கும் வகையில், அவ்வப்போது பிளிச்சிங் பவுடர் போட வேண்டும், என சந்தை நிர்வாகிகளுக்கு யோசனை வழங்கப்பட்டது.

சந்தை வளாகம் முழுவதும் மருந்துகள் தெளிக்கப்பட்டன. மேலும் மாடுகள்

கொண்டு வரும் பாதைகளில், மாடுகள் மிதித்து வரும் வகையில், மருந்து கலந்த தொட்டிகள் கட்டப்பட்டன. தீவிர பரிசோதனைக்கு பின் மாட்டு சந்தை திறக்க அனுமதிக்கப்பட்டது.

இரண்டு மாதங்களுக்கு பின் கருங்கல்பாளையம் மாட்டு சந்தை நடத்த மீண்டும் அனுமதித்து இருப்பது, வியாபாரிகள், விவசாயிகளிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

## குறைந்த அளவு தண்ணீரை கொண்டு அதிக மகசூல்: ஊடுபயிரில் சாதிக்கும் விவசாயி

தாடிக்கொம்பு:தாடிக்கொம்பு பகுதியில் கடும் வறட்சி நிலவும் நிலையில், ஊடுபயிர் சாகுபடியை விவசாயிகள் பின்பற்றுகின்றனர்.

வறட்சியின் காரணமாக நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து விட்டது. இதனால் பயிர் செய்யும் நிலத்தின் பரப்பளவை சுருக்க வேண்டிய கட்டாய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டு உள்ளனர். எனவே இப்பகுதி விவசாயிகள் ஊடுபயிர் சாகுபடி முறைக்கு மாறி வருகின்றனர்.

விவசாயி ஜேம்ஸ் கூறியதாவது: நான்கு ஏக்கர் பரப்பில் பயிர் செய்யும் அளவிற்கு கிணற்றில் நீர் இருந்த நிலை மாறி, தற்போது ஒரு ஏக்கர் மட்டுமே பயிர் செய்யும் அளவிற்கு நீர் மட்டம் குறைந்து விட்டது. இதனால் ஒரு ஏக்கரில் வாழை பயிரிட்டு, ஊடு பயிராக கடலை மற்றும் வெங்காயம் பயிர் செய்யப்பட்டுள்ளது. வெங்காயம் 100 நாட்களிலும், கடலை 120 நட்களிலும் விளைந்துவிடுகிறது. வாழை மகசூல் தருவதற்கு 10 மாதங்கள் ஆகிறது. வாய்க்காலில் பயிரிடப்படும் வெங்காயம் நோய் தாக்குதலை கட்டுப்படுத்துகிறது. பணப்பயிரான கடலை படர்ந்து வளர்வதால் களையை கட்டுப்படுத்துகிறது. ஊடுபயிர்கள் அறுவடை முடியும் நிலையில் வாழை வளர்ந்து நிழல் கட்டி விடுவதால் களை எடுக்கும் செலவு குறைகிறது. இதன் மூலம் குறைந்த அளவு நீரைக்கொண்டு அதிக மகசூல் பெறமுடிகிறது, என்றார்.

## மொச்சை விலை சரிவு கவலையில் விவசாயிகள்

கூடலூர்:கூடலூரில் மொச்சை விலை குறைந்ததால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கூடலூர் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரப் பகுதிகளான கழுதைமேடு, பெருமாள் கோயில், பளியன்குடி, கொங்கச்சிப்பாறை, லோயர்கேம்ப் உள்ளிட்ட பகுதிகளில் மொச்சை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த நவம்பரில் மொச்சை சீசன் துவங்கியது. கூடலூர் மார்கெட்டுக்கு கொண்டு வரும் மொச்சை மதுரை, ஒட்டன்சத்திரம் உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது.

துவக்கத்தில், கிலோவுக்கு 40 ரூபாய் வரை விலை இருந்தது. அந்த நேரத்தில் மொச்சை வரத்தும் அதிகமாக இருந்தது. அதன்பின், கிலோவுக்கு 25 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை அவ்வப்போது மொச்சை விலை இருந்தது. இந்நிலையில், நேற்று கூடலூர் மார்கெட்டில் மொச்சை விலை கிலோவுக்கு 15 ரூபாயாக குறைந்தது. வரத்தும் குறைந்து விலையும் குறைந்துள்ளது. இன்னும் சில தினங்கள் மட்டுமே வரத்து இருக்கும் நிலையில்,

திடீரென விலை குறைந்ததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

விவசாயிகள் கூறியதாவது:

தேனி மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் மட்டுமே மொச்சை விவசாயம் இருக்கும் நிலையில், ஆந்திரா உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்து, தமிழக மார்கெட்டுக்கு மொச்சை வரத்து உள்ளது. இதனால்தான், இங்கு விலை திடீரென குறைந்துள்ளது. கூடுதல் செலவு செய்து, மொச்சை பறிக்கப்பட்ட போதிலும், விலை குறைந்துள்ளதால், பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது'. என்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தொடர்ந்து நீர் திறப்பு மேட்டூர் அணையின் நீர்மட்டம் சரிவு



மேட்டூர் : தொடர்ந்து தண்ணீர் திறப்பதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 52 அடியாக சரிந்தது.காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால் மேட்டூர் அணைக்கு தண்ணீர் வரத்து குறைவாக உள்ளது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு, வினாடிக்கு 138 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு வினாடிக்கு 2001 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது.தொடர்ந்து தண்ணீர் திறக்கப்படுவதால், நீர் மட்டம் சரிந்து 52.07 அடியானது. தற்போதைய நீர் இருப்பு 19.14 டிஎம்சி.

### 3,000 விமானங்கள் ரத்து வடகிழக்கு அமெரிக்காவில் பனிப்புயல்



வாஷிங்டன் : வடகிழக்கு அமெரிக்காவில் கடும் பனிப்புயல் வீசி வருவதால் 3,000 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன. மேலும் அனைத்து விதமான போக்குவரத்தும் முடங்கி, மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.அமெரிக்காவில் தற்போது குளிர்காலமாகும். ஆனால், வழக்கத்திற்கு அதிகமாக கடும் பனிப்புயல் வீசி வருகிறது. மோசமான வானிலையால் குளிர் மிக அதிகமாகவும், அதிக அளவில் பனிப்பொழிவும் உள்ளது.வடகிழக்கு பகுதிகளில் சராசரிக்கும் குறைவாக தட்பவெப்பநிலை நிலவுகிறது. கிழக்கு பகுதிகளில் சராசரிக்கும் குறைவாக 10 முதல் 25 டிகிரி வரை காணப்பட்டது. வாஷிங்டன் முதல் நியு இங்கிலாந்து வரை பனி படர்ந்துள்ளது.வாஷிங்டனில் கடும் பனிப்புயல் வீசி வருகிறது. அங்கு திங்கட்கிழமை விடுமுறை நாளாகும். ஆனால், செவ்வாய்க்கிழமையும் யாரும் பணிக்கு செல்லவில்லை. புதன்கிழமை அரசு அலுவலகங்கள் 2 மணி நேரம் தாமதமாகவே திறக்கப்பட்டன. கடும் பனியால் அதிகாரிகள் பணிக்கு வராமல் விடுமுறை எடுத்துக் கொண்டனர். சிலர் வீட்டில் இருந்தே பணிபுரிய அலுவலகம் அனுமதித்தது. பயணிகள் மற்ற இடங்களுக்கு செல்ல முடியாமல் தவித்தனர். இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை மிகவும் பாதிப்புக்குள்ளானது. சரக்குகள் அனுப்புவதும் பாதிக்கப்பட்டது. வியாபாரங்கள் அனைத்தும் முடங்கின.அமெரிக்காவில் உள்ள பல அரசு அலுவலகங்கள், பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது. ஓட்டல்கள், சுற்றுலா தலங்கள் மூடப்பட்டுள்ளன. வாகன போக்குவரத்து இல்லாமல் சாலைகள் அனைத்தும் வெறிச்சோடி கிடந்தன. சிகாகோவில் நேற்று தட்பவெப்பநிலை மைனஸ் 28 டிகிரி செல்சியசாக இருந்தது. நியூயார்க்கில் சாலைகளில் பனியின் அளவு 14 அங்குலமும், வாஷிங்டன் விமான நிலையத்தில் 7, பிலடெல்பியா விமான நிலையத்தில் 11 அங்குல உயரத்துக்கு படிந்திருந்தது. மேலும் அமெரிக்காவில் இருந்து செல்லும் 3,000 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளனஇது குறித்து பொதுமக்கள் கூறுகையில், ‘பனிப்பொழிவு குறைவான அளவில் இருப்பது மகிழ்ச்சி. ஆனால், அதிகமாகும் போது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது’ என்றனர்.

**விவசாய முன்னேற்றம் தேசிய கருத்தரங்கு**

சத்தியமங்கலம், : சத்தியமங்கலம் காமதேனு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் இந்திய அரசின் தேசிய சமூக அறிவியல் ஆராய்ச்சிக் கழகமும் இணைந்து ' இந்தியாவில் கிராமப்புற விவசாயத்தின் முன்னேற்றம் மற்றும் அதன் சவால்' என்ற தலைப்பில் தேசிய அளவிலான இருநாள் கருத்தரங்கை நடத்தியது. சிறப்பு விருந்தினராக கொச்சின் அறிவியல் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் பயன்பாட்டு பொருளாதாரத்துறை பேராசிரியர் அருணாச்சலம் கலந்து கொண்டு கருத்தரங்கை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். இந்தியாவில் விவசாயத்துறையின் இன்றைய நிலை பற்றியும், விவசாயத்துறையின் முன்னேற்றத்திற்கு அரசாங்கத்தின் பங்கு, இன்றைய இளைஞர்களின் ஈடுபாடு ஆகியவற்றை பற்றியும் தமது உரையில் விளக்கினார்.

முன்னதாக கல்லூரி நிறுவனத்தலைவர் பெருமாள்சாமி தலைமை ஏற்று விழா மலரினை வெளியிட்டார். கல்லூரி செயலர் அருந்ததி, துணைச்செயலர் செல்வி. மலர்ச்செல்வி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் மோகன்தாஸ் வாழ்த்திப் பேசினார்.

மேலாண்மைத் துறைத்தலைவர் சரவணகுமார் வரவேற்றார். கருத்தரங்கில் வெளிமாநிலங்களில் இருந்து சிறப்பு பேச்சாளர்கள் மற்றும் தலைமை பேச்சாளர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து 650 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்று ஆய்வறிக்கைகளை சமர்ப்பித்தனர்.

**மாட்டுச்சந்தை மீண்டும் கூடியது**

திருப்பூர், : கோமாரி நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து திருப்பூரில் மீண்டும் மாட்டுச்சந்தை கூடியது.

கடந்த ஆண்டு தமிழகத்தில் மாடுகளுக்கு கோமாரி நோய் பாதிப்பு ஏற்பட்டது.திருப்பூர் மாவட்டத்தில் பல மாடுகள் கோமாரி நோயால் இறந்தன. சந்தைகளுக்கு கொண்டு வரப்படும் மாடுகளால் தான் கோமாரி நோய் பரவுகிறது என கால்நடைத் துறையினர் கண்டறிந்தனர். இதைத் தொடர்ந்து மாட்டுச்

சந்தைகள் நடத்த அரசால் தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், கோமாரி நோய் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அதைத் தொடர்ந்து சந்தை நடத்த அனுமதிக்க வேண்டும் என்று விவசாய அமைப்புகள் கேட்டுக்கொண்டதின் பேரில், மாட்டுச்சந்தையை நடத்திக் கொள்ளஅரசு அனுமதி அளித்துள்ளது.

இதைத்தொடர்ந்து, திருப்பூர் மாவட்டத்தில் முத்தூரில் கடந்த 17ம் தேதியும், கன்னிவாடியில் 18ம் தேதியும் மாட்டுச்சந்தை கூடியது. இதன் தொடர்ச்சியாக திருப்பூரில் நேற்று முன்தினம் இரவு (19ம் தேதி) மாட்டுச்சந்தைக் கூடியது. இதில் ஏராளமான விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

**கத்தரிக்காயில் சாம்பல் நோய் தாக்குதலால் விளைச்சல் பாதிப்பு**

ரிஷிவந்தியம், : விழுப்புரம் மாவட்டம் ரிஷிவந்தியம் அடுத்த மேலபழங்கூர், கரையாம்பாளையம், யால் பகுதியில் விவசாயிகள் கரும்பு, நெல் பயிரிடுவதை தவிர்த்து தோட்டக்கலை பயிர்களான கத்திரிகாய், வெண்டைகாய், மிளகாய் செடிகளை அதிகளவு பயிரிட்டுள்ளனர். கத்தரிகாய் ஆறு மாதப்பயிர் என்பதால் முதல் 45 நாட்கள் வரை உரம் வைத்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பின்னர் கத்தரிக்காயை படிப்படியாக அறுவடை செய்ய வேண்டியதுதான். அதன்படி கடந்த இரண்டு மாதமாக பவானி, உஜாலா ரக கத்தரிகாய் அதிக விளைச்சல் ஏற்பட்டுள்ளது. அறுவடை செய்யப்பட்ட கத்தரிக்காய்கள் சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு விற்பனை கொண்டு செல்லப்படுகிறது.

இந்நிலையில் கடந்த ஒரு மாதமாக கடும் பனிபொழிவால் கத்தரிக்காய் செடியில் அடிச்சாம்பல் நோய் ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாக பூ கருகி கொட்டுவது, புழு தாக்குதல் ஆகிய நோய் கடுமையாக தாக்கியுள்ளதால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர். எனவே ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் தோட்டக்கலை துறையை சேர்ந்தவர்கள் இப்பகுதி விவசாயிகளுக்கு நோய் தாக்குவதை பற்றி எடுத்துரைக்க வேண்டும். நோய் தாக்குதலை சமாளிக்க ஆலோசனை களை வழங்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

**போதிய விளைச்சல் இல்லை கால்நடைகளுக்கு உணவான பருத்தி செடிகள்**

திருப்புவனம், : திருப்புவனம் தாலுகாவில் போதிய பருத்தி விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் அந்த செடிகளை கால்நடைகளுக்கு உணவாக்கி வருகின்றனர்.

திருப்புவனம் ஒன்றியத்தில் பழையனூர்., வாடி, பிரமனூர், அச்சங்குளம், ஓடாத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் பருத்தி பயிரிடப்படுகிறது. குறைந்த தண்ணீர், பராமரிப்பு செலவும் குறைவு என்பதால் விவசாயிகள் பருத்தி பயிரிடுவது வழக்கம், பருத்தியில் எல்ஆர் ஏ, எம்சியூ, எஸ்விபிஆர் என நான்கு ரகங்கள் இருந்தாலும் பாரம்பரிய விதையான எம்சியூவையே பெரும்பாலான விவசாயிகள் பயிரிடுகின்றனர். பருத்தி பயிரிட்ட 135வது நாளில் இருந்து அறுவடை தொடங்குகிறது. குறைந்த பட்சம் இரண்டு மாதங்கள் வரை பருத்தியில் இருந்து அறுவடை இருக்கும்.

காய்ப்புழு, வேர்ப்புழு உள்ளிட்ட நோய் தாக்குதலால் பருத்திச் செடிகள் கருகி வருகின்றன. காய் பிடிக்கும் தருணத்தில் பருத்தி செடிகளில் நோய் தாக்கியதால் செடிகள் பழுத்து விட்டன.

ஏக்கருக்கு 5ஆயிரம் முதல் 15 ஆயிரம் வரை செலவழித்துள்ள விவசாயிகள். இந்த செடிகளில் கால்நடைகளை மேய விட்டுள்ளனர். போதுமான மழையில்லாததால் பருத்தி செடிகள் காய்ந்து நோய் தாக்கியுள்ளதாக விவசாயிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

**ஆடுகளுக்கு நோய்வராமல் தடுக்க தடுப்பூசி போடுவது அவசியம் உதவி இயக்குனர் தகவல்**

க.பரமத்தி, : நோய் வராமல் தடுக்க ஆடுகளு க்கு உரிய நேரத்தில் தடுப் பூசி போடுவது அவசியம் என்று கரூர் கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் குழந்தைசாமி தெரிவித்துள்ளார்.

க.பரமத்தி ஒன்றியம் நஞ்சைகாளகுறிச்சி மற்றும் கோடந்தூர் ஆகிய இரு ஊராட்சிகளில் 71பயனாளிகளுக்கு நேற்று இலவச ஆடுகள் வழங்கப்பட்டன. முன்னதாக இந்த பயனாளிகளுக்கான ஆடுகள் வளர்ப்பு பற்றிய பயிற்சி கூட்டம் சின்னதாராபுரம் கால்நடை மருந்தகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் சின்னதாராபுரம் கால்நடை மருத்துவர் மோகன்ராஜ் வரவேற்றார். கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியை பாரதி, தென்னிலை கால்நடை டாக்டர் கலை வாணி ஆகியோர் முன்னி லை வகித்தனர்.

கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் குழந்தைசாமி கலந்து கொண்டு பயனாளிகளுக்கு ஆடு வளர்ப்பு பயிற்சி பற் றிய கையேடுகளை வழங்கி பேசியதாவது:

காலை 8 முதல் 10 மணிக்குள் ஆடுகளை மேய்ச்சலுக்கு கொண்டு செல்லவதுடன் மாலையில் பட்டிகள் அல்லது கொட் டகை அமைத்து பாதுகாக்க வேண்டும். பசுதீவனங் களையும், அடர்தீவனங் களையும் ஆடுகளுக்கு வழங்க வேண்டும். கொட்டகை மற்றும் இடவசதிகள் குறித்தும், தீவனங்களை பராமரிப்பது, தீவனம் தயாரிப்பு முறைகள், இனப்பெருக்கம், சினை ஆடுகள், குட்டிகளை பாராமரிக்கும் முறை, கால்நடைகளை தாக்கும் நோய் களான வெக்கை சார்பு, நீலநாக்கு, செம்மறியாட்டு அம்மை, துள்ளுமாரி, தொற்று கழிதல், கருச்சிதைவு, குளம்பு அழுகல் ஆகிய நோய்களில் இருந்து ஆடுகளை பாதுகாக்க உரிய நேரத்தில் தடுப்பூசி வழங்குவது அவசியம். எனவே உரிய நேரத்தில் கால்நடைகளை அரசு மருத்துவனைக்கு கொண்டு வந்து ஆடுகளுக்கு தடுப்பூசி போட வேண்டும் என பேசினார்.

செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு பற்றிய பயனாளிகளின் சந்தேகங்களுக்கு  கால்நடை மருத்துவர்கள் மோகன்ராஜ், கலை வாணி ஆகியோர் நஞ்சை காளகுறிச்சி 29 பேர், கோடந்தூர் 42பேர் என மொத்தம் 71 பேருக்கு பயிற்சி அளித்தனர். இதில் பயிற்சி பெற்றோருக்கு பயிற்சிகான கையேடுகள் வழங்கப்பட்டது.

பயிற்சி கூட்டத்தில் கால்நடை ஆய்வாளர்கள் ஜானகி, சக்திவேல், சந்திரசேகர், உதவியாளர்கள் மரியஉபகாரம், முருகேசன், தர்மராஜ், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மயிலாடும்பாறை அருகே முந்திரிக்கொட்டை விளைச்சலுக்கு முட்டுக்கட்டை போடும் பூச்சிகள் விவசாயிகள் வேதனை

வருசநாடு, : மயி லாடும்பாறை அருகே பூச்சிகள் தாக்குதலால் கொட்டை முந்திரி விளைச்சல் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

க.மயிலாடும்பாறை பகுதியில் மேல்வாலிபாறை, காந்திகிராமம், சீலமுத்தையாபுரம், தும்முக்குண்டு, முத்துராஜபுரம், வீருசின்னம்மாள்புரம், வண்டியூர், தண்டியக்குளம், மஞ்சனூத்து உள்ளிட்ட மலைக்கிராமங்களில் 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கொட்டை முந்திரி பயிரிடப்பட்டு வருகிறது. இதற்கு தண்ணீர் அதிகம் தேவைப்படாது என்பதால் விவசாயிகள் ஆர்வத்துடன் பயிரிட்டு வருகின்றனர். இந்நிலை யில் கடந்த சில மாதங்களாக முந்திரி மரங்களில் கருகல் நோய், சுருட்டல், கத்தாழை பூச்சிகள் தாக்கி இலைகள் சுருண்டு காய்ந்து வருகின்றன. இதனால் விவசாயிகள் விளைச்சல் பாதிக்கப்படுமோ என்ற அச்சத்தில் உள்ளனர். இதுகுறித்து மஞ்சனூத்து விவசாயி சுந்தரம் கூறுகையில், ‘கடந்த 2 ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால் விவசாயம் அடியோடு பாதிப்படைந்துள்ளது. அடுத்த மாதம் அறுவடை நடக்க வேண்டிய நேரத்தில், பூச்சிகள் தாக்குதலால் கொட்டை முந்திரி விளைச்சலும் கடுமையாக பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. பூச்சி மருந்து தெளித்தும் கட்டுப்படுத்த முடியவில்லை. ஏற்கனவே விவசாயிகள் இந்த தொழிலை விட்டு விட்டு பிழைப்புக்காக மும்பை, கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களுக்கு சென்று கூலி வேலை செய்து வருகின்றனர். இதே நிலை நீடித்தால் கடமலை-மயிலை ஒன்றியப்பகுதி விவசாயிகளின் நிலை கேள்விக்குறியாகி விடும். எனவே, மாவட்ட நிர்வாகம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு போர்க்கால அடிப்படையில் நிவாரணம் வழங்க வேண்டும்’ என்றார்.

## அறுவடைக்கு தயார் நிலையில் காப்பி கொட்டைகள்

பந்தலூர், : பந்தலூர் பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள காப்பி செடிகளில் காப்பி கொட்டைகள் காய்த்து அறுவடைக்குத் தயாராக உள்ளன.

நீலகிரி மாவட்டம் பந்தலூர், கூடலூர் மற்றும் கேரளா வயநாடு  பகுதிகளில் பல

ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் காப்பி பயிரிடப்பட்டுள்ளது. ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் பூ பூக்க ஆரம்பித்து டிசம்பர், ஜனவரி மாதங்களில் அறுவடைக்கு தயாராகிறது. காப்பி அராபீக், ரோபஸ்ட் என இரண்டு வகைப்படும்.
தற்பொழுது அனைத்து பகுதிகளில் உள்ள செடி களில் காப்பி கொட்டைகள் நன்கு பழுத்துள்ளதால் அவற்றை அறுவடை செய்து வருகின்றனர். அறுவடை செய்த காப்பி கொட்டை களை நன்கு காய வைத்து கேரளா போன்ற பகுதிகளில் விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகிறது. காய்ந்த நிலையில் உள்ள காப்பிக் கொட்டை கிலோ ரூ.55 வரை கிடைக்கின்றது.
அறுவடை செய்வதற்காக காப்பி வாரியம் மூலமாக விவசாயிகளுக்கு பல்வேறு ஆலோசனைக ளை வழங்கி வருகின்றனர். காப்பிகளை அரசு மூலமாக கொள்முதல் செய்வதற்கு கூடலூர் பந்தலூர் பகுதிகளில் விற்பனை நிலையம் அமைத்தால் காப்பி விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடை க்கவும், விவசாயிகளுடைய தரம் உயரவும் வாய்ப்பாக அமையும் என இப்பகுதி சிறு, குறு காப்பி விவசாயிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

**நவீன வேளாண் கருவி குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம்**

ஜெயங்கொண்டம், : ஜெயங்கொண்டத்தை அடுத்த தேவாமங்கலத்தில் நவீன வேளாண் கருவி குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. ரொட்டவேட்டர் மற்றும் நிலம் சமன்படுத்தும் கருவியான லேசர் குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் மோகனகிருஷ்ணன் கூறியதாவது: இக்கருவியை கொண்டு நிலத்தை நன்கு சமன்படுத்தி பயிர் செய்வதால் நீர்ப் பாய்ச்சுதல், உரமிடுதல் ஆகியவற்றை ஒரே சீராக அனைத்து இடங்களிலும் மேற்கொள்ளலாம். இக் கருவியை மானியத்தில் பெற உரிய விண்ணப்ப படிவத்தை ஜெயங்கொண் டம் வேளாண் பொறியியல் துறை அலுவலகத்தில் பெற்று பயன்பெறலாம் என்றார்.
நிகழ்ச்சியில் இளநிலை பொறியாளர்கள் கலைமணி, நடராஜன், ராஜாராம், உதவி விதை அலுவலர் அனந்தராமன் மற்றும் விவசாயிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

**சிறு, குறு தென்னை விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்க 100% மானியம்**

பட்டுக்கோட்டை, : தென்னை சாகுபடியில் சொட்டுநீர் பாசனம் அமைக்க சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.
பட்டுக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் மோகன் வெளியிட்டுள்ள அறிக்கை:
பட்டுக்கோட்டை வட்டாரத்தில் 7.500 எக்டேர் (18,500 ஏக்கர்) பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. போதுமான மழையில்லாததாலும், தொடர்ந்து சாகுபடி செய்து வருவதாலும் நிலத்தடி நீர்மட்டம் குறைகிறது. இதனால் தென்னை பயிர் பாதிப்படைகிறது. தென்னை சாகுபடியில் கூடுதல் மகசூல் பெற நீரும் ஒரு முக்கிய காரணமாகும். இந்த நீர் தேவையை சொட்டுநீர் பாசனம் அமைப்பதன் மூலம் பூர்த்தி செய்யலாம்.
சொட்டுநீர் பாசன முறை என்பது தேவையான அளவு தண்ணீரை சரியான நேரத்தில் பயிருக்கு தருவதாகும். மேலும் தண்ணீருடன் உரங்களையும் சொட்டுநீர் பாசன குழாய் மூலம் வழங்கலாம். சொட்டுநீர் பாசனம் அமைக்க ஆர்வமுள்ள விவசாயிகள் நுண்ணீர் பாசன திட்டம் மூலம் பயன்
பெறலாம்.
இந்த திட்டத்தின்கீழ் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைத்து கொடுக்கப்படுகிறது. இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைத்து கொடுக்கப்படுகிறது. மேலும் ஒரு விவசாயி 10 ஏக்கர் வரை இதன் மூலம் 5 ஆண்டுகள் பயன்பெறலாம். எனவே விவசாயிகள் சொட்டுநீர் பாசனம் அமைத்து தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தலாம்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கால்நடைகளுக்கு மானிய விலையில் தீவனம் வழங்க ரூ.12½ கோடி ஒதுக்கீடு ஒரு கிலோ வைக்கோல் ரூ.2–க்கு கிடைக்கும்**



கால்நடைகளுக்கு மானிய விலையில் தீவனம் வழங்க ரூ.12½ கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இதன்படி ஒரு கிலோ வைக்கோல் ரூ.2–க்கு கிடைக்கும்.

<u>கால்நடை தீவனம்</u>

தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் தென் மேற்கு மற்றும் வடகிழக்குபருவமழை பொய்த்து போனதால் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து உள்ளது. விவசாயம் செய்வதற்கு தண்ணீர் இல்லாத நிலை உருவாகி உள்ளது. கால்நடைகளின் மேய்ச்சலுக்கு புல் இல்லாததாலும், சோளம் மற்றும் மக்காச்சோளம் சரியாக விளையாததாலும், வீரிய தீவனங்களின் உற்பத்தி குறைந்த காரணத்தாலும் கால்நடைகளுக்கான தீவனத்திற்கு பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது.

இதனால் கால்நடை தீவனத்தின் விலையும் உயர்ந்து உள்ளது. இடுபொருட்கள் விலை அதிகமாகி உள்ளதால், கால்நடைகளை வளர்க்கும் விவசாயிகளுக்கு கடும் சிரமம் ஏற்பட்டு உள்ளது. இதனால் தங்களிடம் உள்ள கால்நடைகளை வந்த விலைக்கு விற்க முடிவு செய்து உள்ளனர். இதை அறிந்த கால்நடை பராமரிப்புத்துறை, கால்நடை வளர்ப்போர் நலன் கருதி, கால்நடைகளுக்கு மானிய விலையில் வைக்கோல் தீவனம் வழங்க ரூ.12½ கோடியை முதல் கட்டமாக ஒதுக்கீடு செய்துள்ளது.

<u>கோவையில் 4 மையங்கள்</u>

இதன்படி ஒரு கிலோ வைக்கோல் ரூ.2 என்ற மானிய விலையில் வழங்கப்படும். ஒரு கால்நடைக்கு ஒரு நாளைக்கு 3 கிலோ வீதம், அதிகபட்சம் 5 கால்நடைகளுக்கு வாராந்திர தேவை அடிப்படையில் தொடர்ச்சியாக 2 முதல் 3 மாதங்கள் வரை வழங்க திட்டமிடப்பட்டு உள்ளது. இந்த திட்டத்தை கோவை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட உள்ளது.

சூலூர், சுல்தான்பேட்டை, மதுக்கரை, கிணத்துக்கடவு ஆகிய 4 இடங்களில் உள்ள அரசு கால்நடை மருத்துவமனைகளில் தீவன விற்பனை கிடங்கு அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இந்த திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்புபவர்கள் ரேஷன் கார்டு நகல், பாஸ்போர்ட் அளவுள்ள 2 போட்டோ மற்றும் கால்நடைகள் பற்றிய விவரங்களை அரசு கால்நடை மருந்தகங்களில் கொடுத்து பதிவு செய்து கொள்ளலாம். அவ்வாறு பதிவு செய்து உள்ளவர்களுக்கு கால்நடை தீவனம் வழங்கும் அட்டை வழங்கப்படும். இந்த அட்டை உள்ளவர்களுக்கு மட்டுமே மானிய விலையில் தீவனம் வழங்கப்படும்.

**<u>–தகவல்: இணை இயக்குனர், கால்நடை பராமரிப்புத்துறை, கோவை.</u>**

**கோமுகி அணையில் மீன்பிடி தொடங்கியது ஒரு கிலோ கட்லா மீன் ரூ.90–க்கு விற்பனை**



கச்சிராயப்பாளையம்,

கோமுகி அணையில் மீன்வளத்துறை சார்பில் மீன்கள் பிடிக்கப்படுகிறது. ஒரு கிலோ கட்லா மீன் ரூ.90–க்கு விற்பனையானது.

<u>நீர்மட்டம் குறைவு</u>

கச்சிராயப்பாளையம் அருகே கல்வராயன்மலை அடிவாரத்தில் கோமுகி அணை உள்ளது. 46 அடி நீர்மட்டம் உயரம் கொண்ட இந்த அணையில் இருந்து கடந்த டிசம்பர் மாதம் 8–ந் தேதி விவசாயபாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

அணை பகுதியில் தொடர்ந்து மழை பெய்யாததால் தண்ணீர் வேகமாக குறைந்து, கடந்த வாரம் 21.50 அடியாக நீர்மட்டம் குறைந்தது. இதை யடுத்து மீன்களின் இனப்பெருக்கத்துக்காக தண்ணீர் விடுவது நிறுத்தப்பட்டது.

<u>கட்லா வகை மீன்கள்</u>

இந்த நிலையில் மீன்வளத்துறை ஆய்வாளர் ராஜ்குமார் தலைமையில் கோமுகி அணை மீன் கூட்டுறவு சங்கத்தை சேர்ந்தவர்கள் நேற்று முதல் மீன் பிடித்து

வருகின்றனர். காலை 6 மணிக்கே பரிசலில் அணைக்கு செல்லும் மீனவர்கள், வலைவீசி மீன்பிடித்தனர்.

இதில் கட்லா வகை மீன்கள் அதிகளவில் சிக்கியது. 2 மாதங்களே தண்ணீர் இருந்த நிலையில் மீன்கள் சிறிதாக இருந்தது. பிடிபட்ட மீன்களை அணைகரை பகுதியில் மீனவர்கள் விற்பனை செய்தனர். ஒரு கிலோ கட்லா மீன் ரூ.90–க்கு விற்பனையானது. இவற்றை சுற்றுப்புற கிராமங்களை சேர்ந்தவர்கள் ஆர்வமாக வாங்கி சென்றனர்.

**கருகிய பயிர்களுக்கு இழப்பீடு கலெக்டரிடம், விவசாயிகள் கோரிக்கை**



நெல்லை,

கருகிய பயிர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என கலெக்டர் மு.கருணாகரனிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

குறைதீர்க்கும் கூட்டம்

நெல்லை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் கூட்டம், கலெக்டர் மு.கருணாகரன் தலைமையில் நேற்று நடந்தது. பல்வேறு கோரிக்கைகள் தொடர்பான மனுக்களை பொதுமக்கள் கலெக்டரிடம் கொடுத்தனர்.

சங்கரன்கோவில் தாலுகா குருவிகுளம் ஒன்றியம் செவல்குளம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் கருகிய மக்காச்சோள தட்டை பயிர்களுடன் கலெக்டர் அலுவலகத்துக்கு திரண்டு வந்தனர். அவர்கள், கலெக்டர் மு.கருணாகரனிடம் ஒரு மனு கொடுத்தனர்.

<u>இழப்பீடு</u>

அந்த மனுவில், எங்கள் ஊரில் சுமார் 1,500 ஏக்கர் பரப்பளவில் மக்காச்சோளம், உளுந்து, பாசிப்பயிறு ஆகியவை விவசாயம் செய்து இருந்தோம். இந்த ஆண்டு பருவமழை சரிவர பெய்யவில்லை. மழை இல்லாததால் நாங்கள் பயிர் செய்த மக்காச்சோளம், பயிறு வகைகள் கருகி விட்டன. அரசு எங்கள் பகுதியை பார்வையிட்டு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்.

மேலும், மக்காச்சோளத்துக்கு ஒரு ஏக்கருக்கு இழப்பீடாக ரூ.20 ஆயிரமும், பயறு வகைகளுக்கு ஓரு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரமும் வழங்க வேண்டும். எங்கள் பகுதியில் சாகுபடி செய்து இருக்கும் எலும்பிச்சை பழத்துக்கு அரசு முழு மானியத்துடன் சொட்டு நீர் பாசனம் அமைத்து தர வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

<u>காலிகுடங்கள்</u>

பாளையங்கோட்டையை அடுத்த திருமலைக்கொழுந்துபுரத்தைச் சேர்ந்த கிராம மக்கள் திரண்டு வந்து, கலெக்டரிடம் கொடுத்த மனுவில், “ஒரு சமுதாயத்தினர் எங்களை தொடர்ந்து தாக்கி வருகிறார்கள். இதனால் அடிக்கடி ஏற்படும் பிரச்சினையால் பஸ்கள் நிறுத்தப்படுகின்றன. பள்ளிக்கூடங்களுக்கு செல்லும் மாணவ–மாணவிகள் பஸ்கள் இல்லாமல் சிரமப்படுகிறார்கள். எங்கள் பகுதியில் பிரச்சினை ஏற்படாமல் தடுத்து, பஸ்களை தொடர்ந்து இயக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

குருவிகுளம் ஒன்றியம் காரிச்சாத்தான் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் காலிக்குடங்களுடன் கலெக்டர் அலுவலகத்துக்கு திரண்டு வந்து கொடுத்த

மனுவில் கூறியிருப்பதாவது:– நாங்கள் காரிச்சாத்தான் அருகே உள்ள புதுச்சுப்புலாபுரத்தில் வசித்து வருகிறோம். எங்கள் பகுதியில் தண்ணீர் பிரச்சினை தொடர்ந்து இருந்து வருகிறது. மானூர் கூட்டு குடிநீர் திட்டம் மூலம் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டியில் தண்ணீர் நிரப்பப்பட்டு குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது எங்கள் பகுதியில் மக்கள் தொகை அதிகமாகி விட்டது. அதனால் அந்த தண்ணீர் போதுமானதாக இல்லை. எனவே கூடுதலாக 30 ஆயிரம் லிட்டர் தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்“ என்று கூறப்பட்டுள்ளது.

தர்ணா போராட்டம்

தமிழ்புலிகள் அமைப்பின் நெல்லை மாநகர் மாவட்ட செயலாளர் இளமாறன் கோபால் தலைமையில், மீனாட்சிபுரம் பகுதி மக்கள் திரண்டு வந்தனர். அவர்களில் சிலர் மேல் சட்டை அணியாமல் வந்து வந்தனர். பெண்கள் கையில் தட்டை ஏந்தி வந்தனர். அவர்கள் கலெக்டர் அலுவலக வளாகத்தில் உட்கார்ந்து தர்ணா போராட்டம் நடத்தினர்.

பின்னர் கலெக்டரிடம் கொடுத்த மனுவில், நெல்லை சந்திப்பு மீனாட்சிபுரம், பரணி தெரு, பாரதி காலனியில் சுமார் 150 குடும்பங்கள் கடந்த 45 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து வந்தோம். பல்வேறு சமுதாயத்தினர் ஒற்றுமையுடன் வசித்து வந்தோம். நாங்கள் முறையாக வீட்டு வரி செலுத்தி வந்தோம். கடந்த 2012–ம் ஆண்டு நீர் நிலை புறம்போக்குகளை அகற்றம் செய்தவதாக கூறி, எங்கள் பகுதியும் அகற்றி விட்டனர். நாங்கள் வசித்தது அரசு புறம்போக்கு நிலம் தான். எனவே நாங்கள் வசித்த வீடுகளுக்கு பட்டா வழங்க வேண்டும். ஏழை மக்களாகிய எங்களுக்கு வீடு கட்டவும் அனுமதி வழங்க வேண்டும்“ என்று கூறப்பட்டு இருந்தது.

சுடுகாடு

பகுஜன் சமாஜ் கட்சி நெல்லை மாவட்ட தலைவர் தி.தேவேந்திரன் தலைமையில், மைலப்பபுரம் மஜரா கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் கலெக்டரிடம் கொடுத்த மனுவில், எங்கள் பகுதியில் ஒரு ஏக்கர் 78 சென்ட் நிலம் உள்ளது. அந்த இடத்தில் பல ஆண்டுகளாக இறந்தவர்களின் உடல்கள் புதைக்கப்பட்டு வந்தது. அந்த சுடுகாட்டை சிலர் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். அந்த நிலத்தை மீட்டுத் தர வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

அகில பாரதீய வித்யார்த்தி பரிஷத் அமைப்பை சேர்ந்த மாணவர்கள் கலெக்டரிடம் மனுவில், அரசு பள்ளிக்கூடங்களில் படிக்கு மாணவ– மாணவிகளுக்கு தமிழக அரசு சார்பில் இலவச லேப்– டாப் கம்ப்யூட்டர் வழங்கப்பட்டு வருகிறது. அதுபோல் சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு லேப்– டாப் வழங்க வேண்டும்“ என்று கூறப்பட்டுள்ளது. பொது இடங்களில் பெண்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என மாவட்ட ஆதி திராவிடர் பழங்குடியினர் நலக்குழு உறுப்பினர் வேலாயுதம், கலெக்டரிடம் மனு கொடுத்தார். இதுபோல் பல்வேறு அடிப்படை கோரிக்கைகளை வலியுறுத்தி பொதுமக்கள் கலெக்டரிடம் மனு கொடுத்தனர். **சிறுவாணி அணையின்நீர்மட்டம் 13 அடி குறைந்தது வருகிற ஜூன்மாதம் வரை தாக்கு பிடிக்கும் என அதிகாரி தகவல்**



கோவை,

சிறுவாணி அணையின் நீர்மட்டம் 13 அடி குறைந்தது. இருந்தாலும் வருகிற ஜூன்மாதம் வரை தாக்கு பிடிக்கும் என குடிநீர் வடிகால் வாரிய அதிகாரி கூறினார்.

## சிறுவாணி அணை

கோவை மாநகராட்சி பகுதிக்கு குடிநீர் ஆதாரமாக சிறுவாணி, பில்லூர் அணைகள் உள்ளன.வறண்டு கிடந்த சிறுவாணி அணைக்கு கடந்த மே மாதம் கடைசியில் இருந்து பெய்யத்தொடங்கிய தென்மேற்கு பருவமழை கைகொடுத்தது. இதனால் கடந்த ஆகஸ்டு மாதத்தில் மட்டும் 17 தடவை நிரம்பி வழிந்துள்ளது. அவ்வாறு நிரம்பி வழியும் தண்ணீர் கேரளாவுக்கு சென்று கடலில் வீணாகியது.

இதைத் தொடர்ந்து சிறுவாணி அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் எடுத்து கோவைக்கு குடிநீர் வினியோகம் செய்யப்பட்டது. இதனால் கோவை மாநகராட்சியில் உள்ள 100 வார்டுகளில் சிறுவாணி குடிநீர் கிடைக்கும் 30 வார்டுகளில் 2 நாட்களுக்கு ஒருமுறையும் பிற பகுதிகளில் 4 நாட்களுக்கு ஒரு முறையும் குடிநீர் வினியோகம் நடைபெற்று வருகிறது.

## 13 அடி குறைந்தது

இந்த நிலையில் தென்மேற்கு பருவமழை முடிவடைந்து, வடகிழக்கு பருவமழை தொடங்கியது. ஆனால் அந்த மழை எதிர்பார்த்த அளவில் கைகொடுக்கவில்லை. சிறுவாணி அணையின் (மொத்த கொள்ளளவு 50 அடி) நீர்மட்டம் குறிப்பிட்ட மாதங்கள் வரையே குறையாமல் இருந்தது. அதைத் தொடர்ந்து குறையத்தொடங்கி, தற்போது 13 அடி குறைந்து உள்ளது.

இது குறித்து குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் கூறுகையில், தற்போது அணையின் நீர்மட்டம் 13 அடி குறைந்து 37 அடியாக உள்ளது. இதனால் தினசரி 101 எம்.எல்.டி வரை எடுக்கப்பட்ட குடிநீர் தற்போது 99 எம்.எல்.டி எடுக்கப்பட்டு கோவைக்கு சப்ளை செய்யப்படுகிறது. இருந்தாலும் வருகிற ஜூன் மாதம் வரை குடிநீர் பிரச்சினை இருக்காது என்று நம்புகிறோம். அதற்காக தினசரி குடிநீர் எடுக்கும் அளவு படிப்படியாக குறைக்கப்படும் என்று அவர்கள் கூறினர்.

## இந்த வார இறுதியில் ரோஜா ஏற்றுமதி தொடங்கும்



உலகம் முழுவதும் பிப்ரவரி 14 காதலர் தினமாக கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் காதல் ஜோடிகள் ரோஜாப்பூக்களை பரிமாறிக் கொள்வது வழக்கம். காதலர் தினம் நெருங்கி வரும் நிலையில் ரோஜா ஏற்றுமதி விறுவிறுப்படைய உள்ளது. இதனால் ரோஜா பயிரிடுவோருக்கு நல்ல வருமானம் கிடைக்க உள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பொதுவாக ஜனவரி 25 முதல் பிப்ரவரி 10–ந் தேதி வரை ரோஜா ஏற்றுமதி மும்முரமாக நடைபெறும். குறிப்பாக பூனா, பெங்களூர் ஆகிய நகரங்களிலிருந்து ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு கோடிக்கணக்கில் ரோஜா செண்டுகள் அனுப்பப்படுகின்றன. வேளாண் மற்றும் பதப்படுத்திய உணவு ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் புள்ளி விவரங்களின்படி ஆண்டுதோறும் பூக்கள் ஏற்றுமதி ஒட்டுமொத்த அளவில் 15 சதவீதத்திற்கும் அதிகமான அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது.

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தேவை தொடர்ந்து அதிகரித்து வருவதால் சில சமயங்களில் ரோஜாக்களுக்கு பற்றாக்குறையும் ஏற்படுவதாக தெரிகிறது. தேவைப்பாடு அதிகம் உள்ளதால் ரோஜா விலையும் அதிகமாகவே இருந்து வருகிறது. 2013–ஆம் ஆண்டில் ரோஜா விலை குறையவே இல்லை. இதனால் ஏற்றுமதியாளர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. காதலர் தின வாரத்தில் மட்டும் ரோஜா விவசாயிகள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு ஒரு செண்டுக்கு ரூ.10 கிடைக்கிறது.

''நகரங்களில்தான் ரோஜாக்கள் விரும்பப்படுகின்றன என்று கூற இயலாது. சிறிய நகரங்களிலும், கிராமங்களிலும் கூட திருமண காலங்களில் ரோஜாக்களுக்காக ரூ.5,000 கோடி முதல் ரூ.10,000 கோடி வரை செலவிட தயாராக உள்ளனர்'' என்று முன்னணி ஏற்றுமதியாளர் ஒருவர் கூறினார்.

**அமெரிக்காவில் மீண்டும் பனிப்புயல்: 4 ஆயிரம் விமானங்கள் ரத்து**



நியூயார்க்,

அமெரிக்காவில் மீண்டும் பனிப்புயல் வீசத் தொடங்கியுள்ளது. கிழக்கு கடற்கரை பகுதிகளில் கடும் பனி பொழிவதால் 2 அடி உயரத்துக்கு பனி படர்ந்து காணப்படுகிறது.இதனால் வடகிழக்கு பகுதிகளில் விமான போக்குவரத்து முற்றிலும் முடக்கப்பட்டுள்ளது.சாலைகளில் பனி படர்ந்திருப்பதால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் 4 ஆயிரம் விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. கடும் குளிர் காரணமாக மக்கள் வீடுகளிலேயே முடங்கியுள்ளனர் என்பது குறிப்பிடதக்கது.